# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

27-11-66



# பாவம் சுகர்ணோ!

வல்லான் வகுத்த வாய்க்கால் என வாய்ப்பறை தட்டப்படும் வையத்தின் அத்தனைப் பகுதியிலும்

சட்டம்
ஒழுங்கு
அமைதி

பற்றிச் சிந்திக்காதவர்களும், பேசாதவர்களும் இருக்க முடியாது.

"ஆண்டவன் படைச்சான்; எங்கிட்டெ கொடுத்தான்" — என்று இறுமாந்திருப்பவர்களுக்குக் கூட இவை தேவைப்படும்.

ஒரு நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் சட்டம், ஒழுங்கு, அமைதி மிக மிகத் தேவை. சட்டமும், ஒழுங்கும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் அமைதி பூக்க முடியும். ஆனால், சட்டமும், ஒழுங்குமே இந்தோனேஷியாவின் அமைதியைக் குலைத்துக் கொண்டிருக்கும் 'விறு விறுப்பான', 'வேடிக்கையான' செய்திகளை இதழ்களில் பார்க்கிறபோது வியப்புத் தோன்றாமல் எப்படி இருக்க முடியும்?

மனிதன் ஒருவன், இன்னொருவனிடம் 'நான் மனிதன்' என்று கூறக் கேட்கும்போது சிரிக்கவும் தோன்றும்; சில வேளைகளில் சிந்திக்கவும் வேண்டும்!

கண், காது, மூக்கு, பிற எல்லா உறுப்புக்களும் உடைய எல்லாமே 'மனிதன்' ஆகிவிடுவதில்லையே! மிருகங்களுக்குக்கூட இந்த உடலுறுப்புக்கள் இருக்கின்றனதல்லவா!

இதைப்போல் சில சட்டங்கள், தன்னைச் சட்டம் என்று சுட்டிக் காட்டிக் கொள்ளவேண்டிய வேளைகள்கூட உண்டாக முடியும் என்பதற்கு உலக நிகழ்ச்சிகள் சில சான்றாகிவிடுகின்றன.

ஒரு சட்டம் போட்டு, அதன் உதவியால் இன்னொரு சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலை இந்தியாவில்! இதுபற்றி இங்கு நான் கூறவில்லை.

சட்டமும், ஒழுங்கும் இணைந்து, இன்னொரு சட்டத்தைக் 'கேலி செய்யும்' இந்தோனேஷியச் சட்டத்தையும் அதன் பரிதாப நிலைமையையும் பற்றி மட்டுமே கவனிப்போம்.

கடந்த ஆண்டில் இந்தோனேஷிய அதிபராக இருந்த டாக்டர் சுகர்ணோ, கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஆதரவாளராக இருந்தார் என்றும், பொதுவுடைமைப்பிடி அங்கே இறுக, இறுக பொதுமக்களின் வெறுப்பும், விரக்தியும் குமுறிக் குமுறி இராணுவ மட்டத்தையும் எட்டி—புரட்சி மலர்ந்து, சுகார்த்தோ ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டார் என்ற செய்தியை இதழ்கள் வெளியிட்டிருந்தனவல்லவா!

சுகர்ணோ பெட்டிப் பாம்பாக்கப்பட்டார் என்றும், அவரது வீரதீர பிரதாபங்கள் மட்டந் தட்டப்பட்டு விட்டனவென்றும்கூட கூறப்பட்டுக் கொண்டு வந்தது.

அவரது நம்பிக்கைக்கு மிகவும் உரியவராக இருந்த சுபாந்திரியோ, சுகர்ணோவின் ஆசைகளையும், ஆணைகளையும்தான் நிறைவேற்றி வந்தார் என்பதெல்லாம் பழைய செய்திகள்!

இதன் விளைவாக, புரட்சிக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட சுபாந்திரியோ இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு, அவருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியிடம், கருணை மனுவும் விண்ணப்பித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது— சட்டப்படி!

சுபாந்திரியோ, நாட்டுப் பாதுகாப்புக்கும், சட்டம் ஒழுங்குகளுக்கும் முரணாக நடந்துகொண்டார்—அதனால் அவருக்கு மரண தண்டனை!—சட்டப்படி!

சுபாந்திரியோ, அதிபர் சுகர்ணோவின் கட்டளைப்படியே நடந்துவந்தார்—இதனால், அவரது செயல்கள் அனைத்தும் அதிபர் சுகர்ணோவைக் கட்டுப்படுத்த வேண்டும்-சட்டப்படி!

இராணுவ நீதிமன்றம், ஜனாதிபதியிடம் 'கருணை' கோரலாம் என அனுமதித்துள்ளது. இதுவும் சட்டப்படியே. ஆனால்அந்த ஜனாதிபதியின் இடத்தில் சுகர்ணோ!

சட்டமும் ஒழுங்கும் அங்கே எந்த அளவுக்கு 'லாலி' பாடிக் கொண்டிருக்கிறது என்பது புரிகிறதா?




சுகர்ணோவின் நிலைமையென்ன? மக்களுக்கு அஞ்சி, சுபாந்திரியோவை விடுதலை செய்வாரா? சட்டத்துக்குக் கட்டுப்பட்டு தண்டனையை உறுதிப்படுத்துவாரா?

'நெருக்கடி நிலை' என்று கூறப்படுவது, தனி மனிதனுக்கு இப்படிப்பட்ட வேளைகள்தான்!

ஆனால் சுகர்ணோவுக்கும், தளபதி சுகார்த்தோவுக்கும் உள்ள உறவு நிலைமை சீர்படவில்லையாம்!

தன்னால் பெட்டிப் பாம்பாக இருக்க முடியாதென்றும், தான் ஒரு சரியான முஸ்லிம் என்றும் நபிகள் நாயகத்தின் கொள்கைகளைப் பூராவும் பின்பற்றுபவர் எனவும் தன்னால் கூட ஓரளவுக்குத்தான் பொறுமையாகப் போகமுடியும் என்றும் கூறி கடந்த கிழமை ஒரு கூட்டத்திலிருந்து சுகார்த்தோவையும் சட்டை செய்யாமல் வெளியேறியிருக்கிறார்.

இந்நிகழ்ச்சி மூலம் இராணுவ கெடுபிடிகளுக்குத்தான் கட்டுப்பட விரும்பவில்லையென்று காட்டிக் கொண்டார் என்றால் — இதன் மூலம், சுபாந்திரியோவை அவர் காக்கக் கூடும் என்று முடிவு செய்யலாம்!

ஆனால், சுபாந்திரியோவுக்கு அபயம் அளித்தால், கூறப்பட்டக் குற்றச்சாட்டுக்களை—சுகர்ணோ ஒப்புக் கொள்கிறார் என்றாகிவிடும்! அதுவும் சட்டப்படி!

இவற்றிற்கிடையே, "சுபாந்திரியோ உள்ளிட்ட மற்றும் ஆறு பேர்களது 'கருணை மனு பற்றி, நீதி மன்றத் தீர்ப்புக்கு முரணாக, புதிய முடிவு எடுக்கக்கூடாது' என்று அதிபர் சுகர்ணோவுக்கு நீதிமன்றம் மற்றொரு கட்டளையிட்டிருக்கிறதாம்!

"பொறுமைக்கும் எல்லையுண்டு" எனக் கூறிப் பொங்கியெழுந்து விட்ட சுகர்ணோவின் செயல்கள்—

சட்டத்துக்குக் கட்டுப்படுமா?
ஒழுங்கை நிலைநிறுத்துமா?
நாட்டு அமைதிக்கு வித்திடுமா?

பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். ஆனால்சுபாந்திரியோவின் உள்மனமோ "தான் மீண்டும் கிராமத்துக்குச் சென்று மறுபடியும் ஒரு மருத்துவராகவே பணியாற்றிக் கொண்டிருக்க "ஆண்டவனே அருள் புரிய மாட்டீரா?"—என்று கேட்டபடிதானே இருக்கும்?

-திருவாரூர் முத்துராமன்

காஞ்சி

மலர் 3 27—11—66 இதழ் 18

# சட்டத் திருத்தம்?

இக்கிழமை தொடக்கத்தில் டில்லி மக்களவையில், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தும் மசோதா வாதத்துக்கு வந்துள்ளது.

தேர்தலில், ஒழுங்கின்மை காரணமாக எழும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு நல்க, இப்போதுள்ள சட்டப்படி, தனி நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டு வந்தன. இனி, புதிய திருத்தத்தின்படி, தனி நீதி மன்றம் அமைக்கும் முறை நீக்கப்பட்டு, அந்த விசாரணை அதிகாரத்தை ஆங்காங்குள்ள உயர்நீதி மன்றங்களிடம் ஒப்படைக்கப்படும்.

வரவேற்கத்தக்க இத்திருத்தம் தொடர்பாக மக்களவையில் எழுந்துள்ள வாதத்தில் பல உண்மை நிலைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

கடந்த மூன்று தடவைகள் இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்குமாகப் பொதுத்தேர்தலைநடத்திப் பெற்றுள்ள அனுபவம் காரணமாக, தேர்தல் கமிஷன், இந்திய அரசுக்குச் சில பரிந்துரைகளைச் செய்துள்ளது.

அதன் காரணமாகவே, இப்போதைய திருத்தம் கொண்டுவரப்பட்டும் இருக்கிறது; கமிஷன் செய்துள்ள பரிந்துரைகளில் குறிப்பிடத்தக்க பிரிவொன்று

'இந்தியாவில் எந்த நீதிமன்றத்திலாவது எந்த ஒரு குற்றத்திற்காவது இரண்டு ஆண்டுக் காலத்திற்குக் குறையாமல் தண்டிக்கப்பட்டால் தண்டிக்கப்பட்ட எவரும், தண்டனைக் காலம் முடிவு பெற்றபின் ஐந்தாண்டுக் காலத்துக்குத் தேர்தலில் கலந்துகொள்ளக்கூடாது''

என்பதகும்.

சமூகத் துரோகிகள் எந்த வடிவத்தில் நாட்டில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதனைப் புரிந்துகொள்ள முடியாமற்போய்விட்ட காலம் இது. இத்தகைய துரோகிகள் மனித வாழ்க்கையுடன் தொடர்புகொண்டுள்ள அத்துணைத் துறையிலும் புகுந்துகொண்டுவிட்டிருக்கிறார்கள்.

ஆனால், இத்தகைய கொடியவர்களை இனம் புரிந்துகொண்டு, தக்க தண்டனை தந்து, மக்களைப் பாதுகாக்கத் தெரியாத மத்திய அரசு, எதற்கெடுத்தாலும், நாட்டில் வளர்ந்து வரும் எதிர்க்கட்சிகளையே பழி சொல்லிப் பழகிவிட்ட காரணத்தால்—

நாட்டில் யார் எத்தகைய காரணத்தால் எந்தவொரு கருத்தை அறிவித்தாலும், அதுவா! அடேயப்பா! அது எதிர்க்கட்சியின் தூண்டுகள்! எதிர்க்கட்சியின் மிரட்டல்'! எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டம்!!!—என்றெல்லாம் கூறிக் கூறி உண்மை நிலைக்குத் திரை போடமுயலும் இயல்பு ஆளுவோரிடம் ன்கு வேர்விட்டு கொப்பும் கிளையுமாகப் பரவி நிற்றவேளை இது!

இப்படிப்பட்ட வேளையில், மேலே காட்டப்பட்ட திருத்தப்பிரிவு அரசினருக்கு எத்துணைச் சாதகமானது என்பதையும், எதிர்க்கட்சிகளை எவ்வளவு கொடிய முறையில் அடக்கிவொடுக்கி, பழியஞ்சாப் பாதகங்களைச் செய்யவும் பயன் படுத்தப்படும் என்பதை, நாட்டின் நல்லறிவாளர் பலரும் உணர்ந்துகொண்டாகவேண்டும்.

"எந்த வொரு குற்றத்திற்காவது''

என்று எழுதப்பட்டுள்ள வாசகம், கொள்ளையடித்தாலும் சரி, கொலை செய்தாலும் சரி, கள்ள வாணிபமோ கருப்புப் பண மோசடியோ செய்தாலும் சரி, கற்பழித்தாலோ, கடத்தல் செய்தாலோ சரி, அல்லாமல்,

''விலைவாசி ஏறிவிட்டது; மக்கள் வாங்கும் சக்தியற்று வதைபடுகின்றனர்! ஆள்வோரே! அல்லல் அகற்றி ஆவனசெய்வீர்.''

என்று கேட்டாலும் சரி, தண்டிக்கப்படக்கூடும். சமூகக் குற்றங்களுடன், அரசியல் குற்றங்களையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து 'இரண்டாண்டுக் காலம்' தண்டனையளிக்கப் பெற்றுவிட்டால், பொதுத் தேர்தலில் நிற்கும் உரிமை மறுக்கப்படும்.

கொள்ளை, கொலை, கற்பழிப்பு முதலான சமூகக் குற்றங்களுக்காக ஒருவன் 23 மாதங்களோ அதற்கும் குறைந்தோ தண்டிக்கப்பட்டிருந்தால் கூட அவன் தேர்தலில் நிற்க முடியுமாம்!

மக்கள் கருத்தை எடுத்துக் காட்டி, ஆட்சியினரின் அநீதப் போக்கைச் சுட்டிக் காட்டி—அதனால் இரு ஆண்டுகள் தண்டிக்கப்பட்டால், அவன் தேர்தலில் நிற்க முடியாதாம்!

மற்றொன்றையும் புரிந்துகொள்ள வேண்டும்; அரசியல் காரணங்களுக்காக ஒருவன் கைது செய்யப்பட்டால், அவனை அடக்கி ஒடுக்கக் கருதும் அரசு, அவனைத் தேர்தலில் நிற்கவியலாத் தன்மைக்கு ஆட்படுத்தி, சாதாரண குற்றங்களுக்காகக்கூட இரு ஆண்டுகட்கு மேல் தண்டனை யளிக்க—அரசு முன்வரக்கூடும்; இத்தகைய இழிவான — முறைகேடான நிலைமைக்கு அரசினரை உந்தித் தள்ளும் இப்பிரிவு!

எனவே, இத்தகைய சதி நோக்கத்தை ஏற்படுத்திவிட இடம் தரும்படியான வகையை அப்பிரிவு தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது.

சமூகக் குற்றங்கள் எவை எவை என்பதனைத் தெளிவாக விளக்குவதுடன், அக்குற்றங்களைப் புரிவோர், எவ்வளவு பெரியவர்களானாலும்—எத்தகு நிலையினரானாலும், தேர்தலில் நிற்க அருகதையற்றவர்கள் என்பதனையும் உறுதியாகச் சொல்லவேண்டும்;

அரசியல் நோக்கங்களுக்காக சிறை செல்வதில் காலவரை காட்டப்படக்கூடாது. ராஜத் துரோகக் குற்றம் நீங்கலான பிற எந்தவொரு அரசியல் குற்றமும் தேர்தலில் நிற்கும் உரிமையைத் தடுக்கக்கூடாது —என்ற வகையில் மசோதா திருத்தம் செய்யப்பெற்று நிறைவேற்றப் பட்டாலொழிய,

உண்மையான ஜனநாயகம் செயல்படுகிறது என்றோ, மக்களது அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது என்றோ, எதிர்க்கட்சிகளை அரசு அடக்குமுறைக்கு ஆளாக்குகிறது என்ற குற்றச்சாட்டுக்களிலிருந்து மீள்வது என்பதோ வருங்காலத்தில் இயலாததாகிவிடும்.

ஆகவே ''எந்தவொரு குற்றத்திற்காவது''—என்ற பகுதி மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என்பதனையும், இது நிறைவேற்றப்படாவிட்டால், அதன் விளைவுகள் எத்தகையனவாயிருக்கும் என்பதனையும் மக்களும், வாக்காளர்களும் சிந்திப்பார்களாக!

# அமைதி

**மா. கி. த**

'அமைதி பொன்' என்னும் பொருளில் ஆங்கிலப் பழமொழி ஒன்று இருக்கிறது. எனக்கு அந்தப் பழமொழி பொருளற்றதாகத்தான் தெரிகிறது, ஓசையில் உலகம் இயங்குகின்றது என்று காணும்போது, எப்படி ஓசையற்ற தன்மையை பொன் என்று ஏற்றுக்கொள்வது? வேண்டுமானால் அதைப் 'பதினாலுகாரட்' பொன் என்று சொல்லுங்கள்; போனால் போகிறது என்று ஒப்புக்கொள்ளலாம்.

காற்று, நீர், தீ, மண் இவை போலவே ஓசையும் இயற்கையானதே; இயற்கைக்கு மாறானது அல்ல. அது இயற்பகை அல்ல!

காற்று 'ஹோ' என்று வீசுகின்றது; இல்லையானால் 'உஸ்' 'உஸ்' என்று அடிக்கிறது. அப்படித்தானே கதைகளில் வருகிறது! கடலின் அலைகள் 'ஓ' என்று எழுந்து வீழுகின்றன. கூடுவிட்டுப் பறக்கும் பறவை கூவிச் சிறகடிக்கிறது. குகைவிட்டு எழும் விலங்கு குரல் எடுத்து வருகிறது. மனிதன் மட்டும் என்னவாம்? பிறந்தவுடன் 'ஓ' என்று அழுது அரற்றி, தான் இந்த உலகில் உதித்துவிட்ட உண்மையை உணர்த்துகின்றானே! அப்போது தொடங்கும் அழுகையை அவன் பின் எப்போது விடுகின்றான்? ஒன்று, தான் அழுகின்றான்; இல்லையானால் பிறரை அழவைத்து வேடிக்கைப் பார்க்கிறான்.

எங்கும் எதிலும் ஓசையை எழுப்பியே மகிழுகின்றான். பேரோசையாக ஒன்றை எழுப்பி அந்த சந்தடிசாக்கில் தாலியைக் கட்டிவிடுகிறானே மனிதன்.

வாழும்போது, வாய்மூடிமௌனியாக இருக்கிறவனை யாரும் கவனிக்கக் காணோம். அழுத பிள்ளைக்குத்தான் தாய்கூட பால் கொடுக்கிறாள். அழுது பால் குடித்த பிள்ளை வளர்ந்த பிறகும் ஏதேனும் ஒரு வகையில் தன்நிலையை உணர்த்தினால்தான் ஏதாவது கிடைக்கிறது. 'வாழ்க' என்றோ, 'வீழ்க' என்றோ ஓசை எழுப்பவேண்டியிருக்கிறது.

அரிசிக்காகப்போராட்டம், இரயிலுக்காகப் போராட்டம், சம்பளத்திற்காகப் போராட்டம், உருக்காலைக்காகப் போராட்டம், என்று போராடினால்தான் இன்று எதுவுமே கிடைக்கிறமாதிரி தோன்றுகின்றது.

சாவில் மனிதன் அமைதியாக இருக்கிறானே என்பீர்கள். செத்தவன் அமைதியாகத்தான் கிடக்கிறான். ஆனால் அவனைச் சுற்றி உட்கார்ந்து மற்றவர் அழும் அழுகையை என்னென்பது! அது கூலிக்காக அழும் அழுகையாகக்கூட இருக்கலாம். ஆனால் அண்டை அயல் வீடுகளுக்கு அந்த ஓசை கேட்டுத்தானே தொலைக்கிறது!

இந்த உண்மை தெரியாதவர்கள் தாம் 'அமைதி அமைதி' என்று அமைதியை விட்டுவிட்டுக் கத்துகின்றார்கள். மாணவர்களே அமைதியாக இருங்கள் என்கிறாரே இந்த ஆசிரியர், இவர் அமைதியாக ஒரு மணி நேரம் உட்கார்ந்துவிட்டுப் போனால் எவ்வளவு நல்லது என்று எண்ணுகின்றான் மாணவன். நியாயம்தானே!

'சலசல' என்று ஓடும் ஆறு அழகாக இருக்கிறது, 'கலகல'ப்பாகப் பேசிப் பழகுகின்றவனைப்பாராட்டுகின்றோம்.

உண்மை இவ்வாறு இருக்க அமைதியே பொன்னுக்குச் சமம் என்று ஏன் சொன்னார்கள்?

ஓசை இயற்கையானதுதான். ஆனால் அது கட்டுப்பட்டதாகவும், பயன்தரத்தக்கதாகவும் இருக்க வேண்டும் அல்லவா? அதோடு அது கேட்போர் செவிக்கும் இனிமை பயக்கவேண்டும்; இல்லையேல் அது பயன் தருவது இல்லை.

குரல் இருக்கிறது என்பதால் கத்தவேண்டும் என்பது இல்லை' பேசத்தெரியும் என்பதினால், பொருளோ, பொருத்தமோ பாராமல் பேசிக்கொண்டிருக்கத் தேவை இல்லை. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்கிறது இலக்கணம். அது மொழியில் உள்ள சொற்களுக்கு இலக்கணம், நாம் சொல்லும் சொற்களுக்கு அல்ல என்று இருந்துவிடக் கூடாது. நாம் பேசும் பேச்சும் பொருள் உடையதாக இருக்க வேண்டும். அந்தப் பேச்சு இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்புடையதாகவும் இருக்கவேண்டும். 'சொல்லுக சொல்லில் பயனுடைய' என்று திருவள்ளுவரும் கூறினார். அதையும் 'மன்ற மாசற்ற சில' சொற்களாகவே சொல்லவேண்டும் என்றார். இத்தனை விழிப்பாகவும் பொறுப்பாகவும் பேசாதுபோனால் அந்தப் பேச்சினால் என்ன பயன்? அப்படிப்பட்ட பயனற்ற பேச்சைப் பேசுவதைவிடப் பேசாமல் இருப்பதே மேல் என்பதால்தான் 'பேச்சற்ற அமைதி பெருமதிப்பு உடையது' என்றார்கள்போலும்!


## விற்பனையாளர் தேவை

'காஞ்சி' இதழை கீழ்க்கண்ட ஊர்களில் விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை.

பவானிசாகர்
வந்தவாசி
ராணிப்பேட்டை
காரைக்குடி
ஒண்டிப்புதூர்
திருமங்கலம்

விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்.
'காஞ்சி'
சின்னகாஞ்சிபுரம்.

# தம்பி

## ஒட்டாண்டியாக்கிவிட்டு!

பார்த்துக்கொண்டிருக்கும்போதே நாட்கள் உருண்டோடிக்கொண்டிருக்கின்றன; தேர்தல் வேக வேகமாக நெருங்கி வந்துகொண்டிருக்கிறது.

நாலைந்து மாதங்களிலே பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது என்று நேற்றுதான பேசிக்கொண்டிருந்ததுபோல இருக்கிறது, இப்போது பார்த்தாலோ ஐந்து அல்ல நாலும் அல்ல, மூன்று மாதங்களே இடையிலே உள்ளன என்று கூறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டிருக்கக் காண்கின்றோம்.

நமக்கு மட்டுமா, காங்கிரசுக்கும் அதே நிலைமைதானே என்று கேட்பார்கள், ஆனால் தம்பி! இது ஏழைக் குடித்தனம், ஐந்தும் மூணும் அடுக்காக உள்ள இடம் அல்ல; எல்லாவற்றையும் நாமேதான் கவனித்துக்கொண்டாகவேண்டும். காங்கிரசுக்கு நிலை அப்படியா? ஏராளமான எடுபிடிகள்! பெட்டி வழிய வழியப் பணம்!! இதை முடித்துவிட்டேன — அதனை முடித்துத் தருகிறேன் — இது முடிந்துவிடும் என்று கூறிக் கட்டளையை எதிர்பார்த்துக் கிடக்கும் ஆள் அம்பு உள்ள கட்சி.

பதவியில் உள்ளவர்களிடம், அதிலும் தொடர்ந்து இருபது ஆண்டு அளவு பதவியில் உள்ளவர்களுக்கு, அதன் காரணமாகவே — ஒரு தனி செல்வாக்கு ஏற்பட்டுவிடத்தானே செய்யும்.

பலன் பெற்றவர்கள், பலன்கிட்டும் என்று எதிர்பார்த்துக்கிடப்பவர்கள் அங்கு நிறையபேர் இருக்கத்தான் செய்வர்.


அதிலும் தகுதி திறமை ஆகியவைகளைக் காட்டிலும், பெரிய இடத்து சிபாரிசு, எந்த கூடத்திற்கும் நுழைவுச் சீட்டாகப் பெரிதும் பயன்படும் நாட்டிலே, பதவியில் உள்ளவர்களைப் பலரும் மொய்த்துக்கொண்டிருப்பது எளிதாகப் புரியக்கூடியதுதானே. அதிலும், 'வரம்' கொடுப்பதிலே காங்கிரசார், வேறு எவரும் போட்டியிட முடியாத அளவு வல்லமை காட்டிப் பழக்கப்பட்டவர்கள்.

புதிய பாதைகள் போடுகிறார்கள்!

பள்ளிக்கூடமா? புதிது புதிதாக!

மருந்தகம்! படிப்பகம்! மனமகிழ் மன்றம்! மாதர் சங்கம்! இவைகளுக்கான திறப்புவிழாக்கள், ஆண்டு விழாக்கள்! அமைச்சர்களின் பேருரைகள்! ஒவ்வோர் நாளும்!!

காளை வாங்க, கிணறு வெட்ட, உரம் வாங்க, வரப்பு அமைக்க கடன் கேட்டிருந்தவர்கள், கேட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது, இனி எங்கேகிடைக்கப்போகிறது என்று எண்ணி ஏக்கமடைந்து, சோர்ந்து கிடக்கிறார்களல்லவா, பலர்—அவர்களைத் தட்டி எழுப்புகிறார்கள் தர்பார் நடத்துபவர்கள், கடனா கேட்டிருந்தீர்கள்? அடுத்த வெள்ளிக்கிழமை கிடைக்கும் என்று வாக்களிக்கிறார்கள்.



# மக்கள் குமுறலின் வடிவமே கழகம்!

உமது மகனா உத்தண்டன்? தெரியாமலே போய்விட்டதே! போன வருடமே இடம் வாங்கி இருக்கலாமே! இந்த வருடம் இடம், நிச்சயம்—என்று கூறுகிறார் மண்டலம்.

முகங்களிலே புதிய மலர்ச்சி! வார்த்தைகளிலே தனியானதோர் குளிர்ச்சி! நடவடிக்கைகளிலே ஒரு நட்புணர்ச்சி! எல்லாம் பளிச்சிடுகின்றன!

இவை 'போலி' என்பதனைக்காட்ட மட்டுமல்ல இவை குறித்து நான்கூறுவது. வாக்காளர்களை மயக்க, ஆட்சி நடாத்திடும் கட்சியினரால் முடிகின்ற அளவு, எதிர்க்கட்சிகளால் முடியாது என்பதையும் உணர்த்துவதற்குத்தான்.

உடனடியாக உள்ளம் மகிழ்ந்திடும் செயலைச் செய்வதன் மூலமோ, இனிப்புப் பேச்சுப் பேசுவதன் மூலமோ, நீண்டகாலமாக நடத்திக் கொண்டுவந்த கொடுமைகளை மறைத்துவிடலாம் என்று காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனர்.

ஆனால், உள்ளத்துக்கு மகிழ்ச்சி ஊட்டும் பொருள் தருவதன் மூலமாகவே, மக்களை மயக்கிவிட முடியும் என்ற நிலை இருக்குமானால், ஆளுங் கட்சியான காங்கிரசு, சென்ற தேர்தலிலே 100-க்கு 42 என்ற அளவு ஓட்டுகள்தானா பெற்றிருக்கும்!

ஏழ்மை, அறியாமை, மனக் குழப்பம், மருட்சி என்பவைகளின் பிடியிலே சிக்கிக் கிடப்பினும், தமிழகத்துப் பொதுமக்கள் ஜனநாயக உணர்வை, நீதி நியாயத்தில் கொண்டுள்ள பற்றினை விட்டுவிடவில்லை.

அந்தநம்பிக்கை எனக்கு நிரம்ப இருப்பதனால் மட்டுமே, எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும், இந்த பொதுத் தேர்தலில கழகம் ஈடுபட்டு வெற்றி வாகை சூடும் என்று அறிவித்திருக்கிறேன்.

கொடுமைகளுக்கு ஆளான மக்கள் மனம் குமுறிக் கொண்டிருககிறார்கள் என்பதையும், மீண்டும் கொடுமையின் பிடியிலே சிக்கிவிடக்கூடாது என்பதிலே உறுதியாக உள்ளனர் என்டதையும், அதற்கான பணியாற்றுவதிலே ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதையும் ஒவ்வொரு கூட்டத்திலும் நான் காண்பது போலவே, பொதுமக்களிடம் தோழமைத் தொடர்பு கொண்டுள்ள கழகத் தோழர்கள் அனைவரும் காண்கின்றனர். அதனால்தான் அவர்களின் பேச்சிலே ஒரு தெம்பும், உறுதியும் காணப்படுகிறது.

தொகுதிகளின் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்ததில் தமக்கு ஏற்பட்ட கருத்து பற்றி நாவலர் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார்; அவரிடமேகூட, அந்தத் தெம்பு ததும்பிக் கொண்டிருக்கக் கண்டேன்.

சென்ற தேர்தலின்போது கழகத்திற்கு இருந்த செல்வாக்கு இம்முறை இன்னின்ன காரணங்களால் இந்த அளவு வளர்ந்திருக்கிறது என்பது குறித்து என்னிடம் எடுத்துக் கூறும்போதே கழகத் தோழரின் முகத்திலே ஒரு பொலிவு புதிதாகத் தவழ்ந்திடக் காண்கின்றேன்.

அவர் மாளிகை வாசி அல்ல!

அம்பாரம் அம்பாரமாக செந்நெல்லைக் குவித்து வைத்துள்ள பெருநிலக்கிழார் அல்ல.

ஏழை அல்லது நடுத்தரக் குடும்பத்தினர் அவர்களிடம், தெளிவும் செயலார்வமும் இருந்திடக் காண்கின்றேன். செய்வதைத் திட்டமிட்டு, வகைப்படுத்தி, முறைப்படுத்திச் செய்திட வேண்டும் என்ற ஆர்வம் நல்ல அளவு இருந்திடக் காண்கிறேன்.

கூட்டு முயற்சியிலே எத்தனை சாதிக்க முடியும் என்பதனை நாட்டுக்கு எடுத்துக் காட்டியதுடன், நாமே உணர்ந்து கொள்ளும்படிச் செய்திருப்பது நமது கழகம்.

ஆத்திரத்தினாலோ, அருவெறுப்பினாலோ, வெறும் பிரசாரம் என்ற போக்கினாலோ, நம்மைப்பற்றி, காங்கிரசிலுள்ளவர்கள் எவ்வளவு வேகமாக மேடைகளிலே பேசினாலும், இவனைப்பார்! அவனைப்பார்! என்று இழித்துரைத்தாலும், ஒரு நேரமாகிலும் அவாகள் உண்மையை உணரும்போது

எப்படியோ இப்படி ஒரு வலிவினைத் திரட்டி விட்டார்களே!

என்று தம்மையும் அறியாமல், பேசாமலிருக்க முடியாது.

இதனாலா? அதனாலா? இப்படியா? அப்படியா?

என்றெல்லாம் ஆராய்ச்சி நடத்தி நடத்தி, தமது முறைகளைக்கூட அவர்கள் நம்முடைய முறைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டும் பார்க்கிறார்கள். ஆனால் ஓரே ஒரு உண்மையைத்தான் அவர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்.

மக்களின் மனக்குமுறலின் வடிவமாக
மக்களின் பெருமூச்சின் வடிவமாக!

திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது என்ற உண்மையை.

மற்றொரு நம்பிக்கை ஆளவந்தார்களுக்கு இருக்கிறது; பணம் பத்தும் செய்யும் என்பதிலே உள்ள நம்பிக்கை.

ஆனால் பணத்திற்கு உள்ள மதிப்பே இன்று வேகமாகக் கெட்டுக்கொண்டு வருகிறது.

டில்லியில் மூண்டிடும் கலவரங்களைப் பற்றிய செய்தி கேட்டு, இந்தியாவுக்குக் கடன் தொகை எந்த அளவு கொடுக்கலாம் என்பதற்காகக் கலந்து பேசிய குழுவினர், இத்தனைக்குழப்பம் மூண்டுகிடக்கும் நாட்டுக்குப் பெரிய அளவு தொகை கடன் கொடுப்பது நல்லதுதானா? என்று யோசிக்கின்றனர்; கவலையைத் தெரிவித்துள்ளனர் என்பதும்,

வெளிநாடுகளிலே வாங்கியுள்ளகடனைத் திருப்பித் தருவதற்கான தவணையில் மாறுதல் தேவை; அதாவது பிறகு திருப்பித் தருகிறோம் என்று கூறித் தவணை வாங்கவேண்

# உணவுக்கே வழியில்லை; ஓட்டா வேண்டும்?

டும் என்ற யோசனை டில்லி வட்டாரத்தில் உலவுகிறது என்பதும்,

இந்தியாவிலே தொழில் நடத்த 'முதல்' போடுவதற்குப் டணத்திலே குறியாக உள்ள ஜப்பான் தடக்கம் காட்டுகிறது என்பதும்,

இன்றுள்ள பொருளாதார நெருக்கடியை எடுத்துக் காட்டுவதனை எத்தனை வேகமான காங்கிரஸ் பிரசாரகரும் மறுத்துவிட மாட்டார்.

நிலைமை, பல முனைகளில் நல்லபடியாக இல்லை.

சமூகத்தில், ஒழுங்கும் சாந்தியும் பெரிய அளவில் குலைக்கப்பட்டிருக்கிறது.

பசியும் பட்டினியும் கொட்டும் கொடுமை வளர்ந்தபடி இருக்கிறது.

**இவைகளிலே ஒன்றைக் கூட சீர்படுத்த காங்கிரஸ் அரசினால் முடியவில்லை.**

இருப்பினும் தேர்தலிலே நாங்கள் வெற்றி பெறுவோம் என்று அவர்கள் மார்தட்டுகிறார்கள் என்றால், எதை நம்பிக் கொண்டு அவ்விதம் பேசுகிறார்கள் என்று யோசிக்கவேண்டாமா?

படி அரிசி நாலு ரூபாயாம்! இந்த அக்ரமம் வேறு எங்காவது நடந்திடுமா? அனுமதிப்பார்களா? என்று பதறுகிற மக்களிடம் எப்படியும் நாங்கள் ஓட்டுகளைப் பறித்திடுவோம் என்று காங்கிரஸ் கட்சி கூறுகிறது என்றால், பணத்தால் எதையும் சாதித்துக் கொள்ளலாம் என்பது தவிர வேறு எதுவாக இருக்க முடியும்.

காலை மலர்ந்ததும், மக்கள் கண்களிலே படுவது, பட்டினிச் சாவு, கிளர்ச்சி, துப்பாக்கிச் சூடு, சிறை பிடித்தல், வெளி நடப்புகள், புகார்கள் உட்பூசல்கள் என்பன பற்றியே. ஒரு நாடு மிகச் சீர்கேடான நிலையிலே இழுத்துச் செல்லப்படுகிறது என்பதற்கு வேறென்ன சான்றுகள் வேண்டும்.

நம்ம சர்க்கார்

நல்லவர் சர்க்கார்

என்று சொந்தம் கொண்டாடுகிறார்கள்; இதற்கா எதிர்ப்புக் காட்டுவது என்று கேட்கிறார்கள்; மக்களோ

இருண்ட கண்களையும்

வரண்ட தலையையும்

காய்ந்த வயிற்றையும்

காட்டுகிறார்கள்; நம்ம சர்க்கார் தந்ததவை! ஆனந்தத் தாண்டவமாடச் சொல்லுகிறீர்களா ஐயா! என்று கேட்கிறார்கள். இந்த நிலையிலும் 'ஓட்டு' எமக்குத்தான் என்று எந்தத் தைரியத்தில் பேசுகிறார்கள் ஆளுங்கட்சியினர்?

பணம் இருக்கிறது பார்த்துக்கொள்ளலாம் என்ற ஒரே தைரியத்தில்.

போக போக்கியத்திலே மூழ்கி, வலி விழுந்து கிடந்த ஐநூறு சிற்றரசர்களையும், செல்வச் செருக்கு மிக்கோரையும் பதவிக்காகவும் பட்டத்துக்காகவும் பல்லிளித்துக் கிடப்போரையும், ஆலவட்டங்களையும் ஆமாம்சாமிகளையும் பக்கத்துணையாக வைத்துக் கொண்டு இருநூறு ஆண்டுகள் வெள்ளை ஏகாதிபத்தியம் ஆட்சி நடத்த முடிந்ததல்லவா? இவர்கள் அதே 'பாணி'யில் தமது ஆட்சியை நடத்திச்செல்லமுடியும் என்று நம்புகிறார்கள்.

**அவர்களால் முடிகிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை, நாடு இன்னமும் அவர்களின் ஆட்சியைத் தாங்கிக்கொள்ள முடியுமா என்பதுதான் பிரச்சினை.**

தம்பி! காங்கிரசாட்சி துவக்கப்பட்டபோது, மக்களின் வாழ்விலே வளம் உண்டாக்க என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, ஒரு வசீகரமான புன்னகையுடன் காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்கள்,

**ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப் போகிறோம் என்று.**

மூன்று முடிந்து, நாலாவது நடமாட விடப்பட்டிருக்கக் காண்கிறோம். திட்டங்களால் கிடைத்த பலன் என்ன? எங்கு சென்றுள்ளது? என்று கேட்கிறார்கள்;

**நானும் அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். ஐந்தாண்டுத் திட்டங்களால் விளைந்த பலன், எங்கு போயிற்று என்றுதான் தெரியவில்லை; ஏழைக்கு அந்தப்பலன் வந்து சேரவில்லை என்று காமராஜர் கூறுகிறார்.**

திட்டத்தை நிறைவேற்றினோம். ஆகவே எமக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்பதற்கான நியாயம் எங்கே இருக்கிறது. பலன், போன இடம் தெரியவில்லை என்று பெருந்தலைவரே பேசுகிறாரே!

திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருள் குவிய, வரி கொடுத்துக் கொடுத்து ஏழை எளியோர்கள். மேலும் இளைத்துப் போய், களைத்துப்போய் இருப்பது தெரிகிறது; திட்டத்தால் பெற்ற பலன் வேறு என்ன, எங்கே இருக்கிறது என்று காட்டக் கூடக் கூச்சப்படுகிறார்கள் காங்கிரசுடன் பெரிய தலைவர்கள்.

ஆராய்ச்சி நடத்துகிறார்கள், திட்டம் ஏன் எதிர்பார்த்த பலனைச் சமூகத்துக்குத் தரவில்லை என்று.

திட்டம் சரியாகத் தீட்டப்படவில்லை.

திட்டம் நடைமுறைக்கு ஏற்றதாகத் தீட்டப்படவில்லை.

திட்டம் சரியாகவே தீட்டப்பட்டது, செயல் படுத்துவதிலேதான் தவறுகள் நேரிட்டு விட்டன.

செயல்முறை சரியாக வகுக்கப்படவில்லை.

செயல்படுவதற்குத் தக்கவர்களை அமர்த்தவில்லை.

செயல் படுத்தியவர்களுக்குப் போதிய அக்கறை இல்லை.

திட்டத்தின் உட்பொருளைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை.

திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு முழு அளவில் கிடைக்கவில்லை.

# சுதந்திரம் வந்தும் சுபிட்சம் இல்லையே!

இப்படி ஆளாளுக்கு ஒரு குட்டு குட்டியபடி உள்ளனர். குட்டுபவர்கள் எல்லோருமே காங்கிரஸ் எதிர்ப்பாளர் என்று கூறிவிட முடியாது. காங்கிரஸ் காரர்களிலேயே பலர், குறை காணுகின்றனர்.

**எல்லோரும் ஒரு சேர இன்று ஒப்புக்கொண்டிருப்பது, திட்டங்கள் எதிர்பார்த்த பலனை சமுகத்துக்குத்தரவில்லை என்பது.**

ஆகவே, எந்தத் திட்டங்களைத் தமது சாதனையிலே சிகரம் போன்றது என்று இவர்கள் கூறிக்கொண்டு வந்தார்களோ, அந்தத் திட்டங்களே தோல்வி அடைந்து விட்டன என்பது மறுக்கப்பட முடியாத ஆனல் பயங்கரமான உண்மையாகி விட்டது. இந்தத் திட்டங்களுக்காகச் செலவாகி இருக்கும் பணத்தின் அளவு, எவருடைய தலையையும் சுற்றச் செய்துவிடும்; அத்தனைப் பெரிய தொகை.

"விடமாட்டோம் இந்தியாவை" என்று வெள்ளையர் வீம்பு பேசிக்கொண்டிருந்த நாட்களில் டில்லிப் பாராளுமன்றத்தில் வீற்றிருந்த கோவிந்த வல்லப பந்த் கோபாவேசமாக ஒருமுறை சுயராஜ்ய திட்டம் பற்றிப் பேசியபோது, வெள்ளையர் ஒருவர் குறும்புத்தனமாகக் குறுக்கிட்டு,

சுயராஜ்யம் கிடைத்ததும் என்ன செய்யப்போகிறீர்கள்?

என்று கேட்டபோது, பந்த் அவர்கள் பதிலளித்தார், சுட்சுட. அவரால் அன்று, எந்த அளவுக்குச் செல்ல முடிந்தது?

**சுயராஜ்யம் கிடைத்ததும் நாட்டை வளப்படுத்த திட்டம் தீட்டுவோம். நூறு கோடி ரூபாய் அளவுசெலவிட்டுத் திட்டம் நிறைவேற்றுவோம்**

என்று கூறினர். கவனித்தனையா தம்பி! 100 கோடி! அது அன்று பிரம்மாண்டமான தொகை!!

ஆனல் காங்கிரஸ் அரசு இந்த ஐந்தாண்டுத் திட்டங்களுக்காகச் செலவிட்டிருக்கும் தொகை, 20000 கோடி ரூபாய்! பண்டிதபந்த்தினல் நினைத்துப் பார்த்திருக்கக்கூட முடியாத தொகை!! இவ்வளவு செலவான பிறகும், இன்று நாட்டிலே இல்லாமை, போதாமை! அமெரிக்கா பறக்கிறர் அமைச்சர் சுப்ரமணியம், உணவுக்காக!! சௌத்ரி, ஐரோப்பா பயணமாவார், கடன் கேட்க! மேத்தா, ரஷியா செல்லக்கூடும்! இந்திரா அம்மையார், உலகசமாதானம் உண்டாக்க யூகோ செல்லக்கூடும்.

பாவம், அவர்களால் இங்கு இருக்க முடியவில்லை.

காது குடையும் கூச்சல்! கண்ணைக் கெடுக்கும் காட்சி! மனதை மருட்டும் செய்திகள்! நிம்மதி இல்லை! நிலைகொள்ளவில்லை.

பாரிசோ, மாஸ்கோவோ, நியூயார்க்கோ, இலண்டனே எங்காவது சென்று சிறிதளவு நிம்மதியாவது பெறலாம் என்று எண்ணுகிறர்கள். தூய்மையான மேக மண்டலங்களுக்குமேலே விமானம் செல்லும்போது, ஆர்ப்பரிப்பும், பேரணியும், கடை அடைப்பும் கலவரமும் இல்லாதநிலை காண்கின்றனர்! ஒரு நிம்மதி!

இலஞ்சக் குற்றச்சாட்டுகள் கூறிடுவோர், குறுக்குக் கேள்விகள் பூட்டிடுவோர், ஊழல்களை அம்பலப்படுத்துவோர், அமீர் சந்த் பியாரிலால் போன்றவர்கள்பற்றிக் கிளறிவிடுவோர் இல்லாத இடம்; ஒரு மகிழ்ச்சி!

இந்தவிதத்தில் அவர்களும் பாவம், தங்கள் மனதிலே குமுறிக்கொண்டிருக்கும் கவலையை மறந்துவிட முயற்சிக்கிறர்கள்.

20 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டு, தோல்விகண்ட கட்சி, கூனிக் குறுகிப்போக வேண்டியது முறையாக இருக்க, இந்தத் திட்டங்களின் கர்த்தாக்களாகிய எமக்கே ஓட்டுகள்! — என்று பாத்யதை வேறு கொண்டாடுகிறர்கள்!!

**தெளிவும் ஜனநாயக உணர்வும் இருக்க வேண்டிய அளவிலும் வேகத்திலும் இந்த நாட்டில் இருந்திடுமானல், 20 ஆயிரம் கோடி ரூபாயைப் பாழாக்கினதற்காகக் காங்கிரஸ் கட்சியைக் கூண்டிலே நிற்கவைத்து விசாரணை நடத்தி இருப்பார்கள்!!**

**இன்றே, இந்த ஆட்சியின் போக்கை எதிர்க்கத் துணிபவர்களை, காரணம் கூடக் காட்டாமல் சிறையில் தள்ளிவைக்க, தடுப்புக் காவல் சட்டத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பது என்று பாராளுமன்றத்தில், பலமான எதிர்ப்பைத்துச்சமென்றுத் தள்ளிவிட்டு நிறைவேற்றி வைத்துக்கொண்டுவிட்டார்கள்.**

உரிமைகள் குலைக்கப்படுகின்றன, இது நாம் ஏற்றுக்கொண்டுள்ள இந்திய அரசியல் சட்டத்திற்கே ஒவ்வாதது என்று கண்டிக்காத மேதைகள் இல்லை; சட்ட நிபுணர்கள் இல்லை. இன்னமும் நெருக்கடி நிலைமையை நீடித்துக்கொண்டிருப்பது அறமாகாது; அதன்பெயரால் பாதுகாப்புச் சட்டத்தை ஏதாவது ஒரு வடிவத்தில் நீட்டிக்கொண்டு போவது அடாத செயலாகும் என்று, நீதி மன்றங்களில் கீர்த்திமிக்க நிலைபெற்றிருந்தவர்களெல்லாம் எடுத்துக் கூறிவிட்டனர். சர்வாதிகார நாடுகளில் தவிர வேறு எங்கும் இப்படிப்பட்ட ஆள்தூக்கிச் சட்டங்கள்-நாக்கறுப்புச் சட்டங்கள் இல்லையே என்றுகூறிக் கண்டிக்கின்றனர் சான்றேர் பலர்.

**இந்தியாவின் முன்னள் சட்ட அமைச்சர் A. K. சென் அவர்களே இந்தப் போக்கைக் கண்டித்துப் பேசுகிறர்.**

ஆனல், தம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் மிக்கார் எவர் உளர் என்ற நினைப்புத் தடித்துப்போன நிலையில், தடுப்புக்காவல் சட்டம்கூட தேவைதான் என்று காங்கிரசார் வாதாடுகின்றனர்; எண்ணிக்கை வலி

# அஞ்சாநெஞ்சினர்; அறப்போர் இயல்பினர்!

வினைக்காட்டி அக்ரமத்தை நியாயமாக்கிக் காட்டுகின்றனர்.

தடுப்புக்காவல் சட்டம், ஒப்புக்கொள்ளப்பட்ட சாதாரண சட்ட முறையாகிவிட்டது என்றே பேசுகிருர், உள்துறை அமைச்சர் — புதியவர் — சவாண்! மனித உரிமைகள் அவ்வளவு கேவலப்படுத்தப்பட்டுவிடப்பட்டுள்ளன.

உணவு போதுமான அளவு இல்லை.

உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

சாந்தி இல்லை, சமாதானம இல்லை.

என்ருலும், ஓட்டு இருக்கிறதல்லவா, அதை எமக்குக் கொடுததிடுக! என்று கேட்கிருர்கள்.

ஓட்டாண்டியாக்கிவிட்டு ஓட்டும் கேட்கிருர்கள்.

புதுடில்லியில், 'ஜனநாயக நிலை' பற்றிய கருத்தரங்கு ஒன்றில் பேசிய மேனுட்டு அரசியல்துறைப் பேராசிரியர் ஒருவர்

"மக்கள் காங்கிரசாட்சியி ம் வெறுப்படைந்துள்ளனர்; ஆனாலும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகின்றனர். இந்த விந்தை இந்திய ஜனநாயகத்திலே காணப்படுகிறது. இது ஆராயப்படவேண்டிய பிரச்சினையாகும் என்று குறிப்பிட்டிருக்கிருர்.

உள்ளபடியே தம்பி! காங்கிரசாட்சியிடம் மக்கள் கொண்டுள்ள கேபமும் கொதிப்பும், வெளிநாடுகளிலே உள்ள ஆய்வாளர்களும் அறிந்துள்ளனர். மக்களிடையே இவ்வளவு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் மூட்டிவிட்ட காங்கிரஸ் கட்சியை மக்கள் மீண்டும் ஆதரித்து ஆட்சியில் அமர்த்தமாட்டார்கள் என்று கருதுகிருர்கள். ஏனெனில், இங்கு காங்கிரசாட்சி செய்திருப்பது போன்ற தவறுகளிலே நூற்றிலே ஒரு பங்கு தவறு செய்திடினும் போதும், அங்கு அத்தகைய ஆட்சியை மக்கள் தாங்கிக்கொள்ளமாட்டார்கள். ஜனநாயக உணர்வு அங்கெல்லாம் அந்த அளவு இருக்கிறது.

இங்கோ ஆட்சியினிடம் மக்களுக்கு அச்சம் மூண்டுவிடுகிறது.

அக்ரமம் செய்திடினும், ஆட்சி தன்னிடம் சிக்கிக்கொண்டுள்ள வலிவினைக் கொண்டே, எதிர்ப்புச் சக்திகளை முறியடித்துவிடும் என்றபீதி பிடித்தாட்டுகிறது.

இந்த அச்சத்தை, தம்பி! உன் இடைவிடாத முயற்சியின் துணைகொண்டு, திராவிடமுன்னேற்றக் கழகம் பெரும் அளவுக்கு ஓட்டிவிட்டிருக்கிறது.

இந்த நிலைமையை நன்கு புரிந்து கொண்ட காங்கிரசார் இம்முறை 'கடைசி ஊசி' போடுவது என்பாரளே அதுபோல உள்ள பணம் அவ்வளவையும் வீசிப் பார்த்துவிடுவது என்று துணிந்துவிட்டுள்ளனர். பார்க்கட்டும்! பாசி பிடித்துப்பான பணமெல்லாம் வெளியே வரட்டும்! பாட்டாளியின் வயிற்றில் அடித்துச் சேர்த்து வைத்துள்ள பணமெல்லாம் வெளியே வரட்டும்! ஒன்றை ஒன்பதிற்கு விற்றுச் சேர்த்துள்ள பணமெல்லாம் வெளியே வரட்டும்! கள்ளப்பணம் கருப்புச் சந்தைப் பணம், வரிகொடுக்காமல் ஏய்த்துச் சேர்த்தப் பணம் எல்லாம் வெளியே, வரட்டும்!! ஏன் வருகிறது என்பதா மக்களுக்குத் தெரியாது; புரியாது!! மிக நன்ருகப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிருர்கள் எனபதை நான் பேரூர்களில் மட்டுமல்ல, சிற்றூர்களிலே எல்லாம் பார்க்கிறேன்.

என் ஆவல் திருமளவுக்கும் தோழர்களின் அன்பழைப்பை நிறைவேற்றும் அளவுக்கும் என்ஞல் எல்லா இடங்களுக்கும் சென்று வர முடியவில்லையே, அதற்குப் போதுமான வலிவு இல்லையே என்றுதான் வருததப்படுகிறேன்.

நண்பர்கள் அடுக்கடுக்காக நிகழ்ச்சிகளைக் கூறும்போது சுரீல் என்று கோபம்கூட வந்துவிடுகிறது, இப்படி 'வேலை வாங்குகிருர்களே' என்று. ஆனல். சென்று, அங்கு ஆர்வம் ததும்பும் நிலையில் ஆடவரும் பெண்டிரும், முதியோரும் இளைஞரும் திரண்டு இருந்திடக் காணும்போது, எல்லாக் கஷ்டங்களும் இருக்கும் இடம் தெரியாமல் பறந்தோடிப் போய்விடுகின்றன.

இவ்வளவு பேரும் எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பவர்கள்

காங்கிரசினுல் மூட்டிவிடப் பட்டுவிட்ட கொடுமைகளை எதிர்ப்பவர்கள்.

காங்கிரசுக்கும் கனதனவான்களுக்கும் ஏற்பட்டுவிட்டுள்ள கூட்டுச் சதித் திட்டத்தைத் தகர்த்திடத் துடிப்பவர்கள்.

ஏழை வாழவேண்டும்; இல்லாமை ஒழியவேண்டும்; நிம்மதி ஓங்கவேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்துக்காகப் போராடுபவர்கள்.

மொழி காத்திட, உரிமை காத்திட, எதனையும் இழந்திடும் துணிவு பெற்ற தூய உள்ளத்தினர்.

இவர்களை ஆசை அலைக்கழிக்கவில்லை; அச்சம் மருட்டவில்லை, ஆளவந்தார்களின் அட்டகாசம் அடக்கிட முடியவில்லை.

ஏடு பல காட்டி இவர்களை மயக்கிட முடியவில்லை.

ஏதேதோ செய்கிருேம் என்று தித்திப்புத் தடவி இவர்களை இழுத்திட முடியவில்லை.

இவர்கள் அஞ்சா நெஞ்சினர்; அறப்போர் இயல்பினர்,

இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்!

இவர்கள் பலர்! மிகப் பலர்! இவர்களை வீழ்த்திட முனைபவரோ சிலர்!

இவ்விதமான எண்ணமெல்லாம்கொள்ளுகின்றேன்; இதயத்திலே ஓர் இசையே சுரக்கிறது. அவர்களைக் காண்கிறேன்; கனிவு என்ருல் என்ன என்பது விளக்க

# விம்மும் குமுறல் விழுகிறதே காதில்!

மாகிறது, அவர்களிடம் பேசுகிறேன்; பாசம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்கிறேன்; புதியதோர் ஆர்வம் பெறுகிறேன்.

என் உள்ளத்தில் எழுந்திடும் ஆர்வத்தின் அளவு எவ்வளவோ, அந்த அளவு என் உடலில் வலிவு இருக்கக் கூடாதா, இல்லையே என்று எண்ணி ஏக்கம்கொள்கிறேன்.

ஒவ்வொரு கூட்டமும் என்னை அந்த மக்களுடன் பிணைத்துவிடுவதை உணருகிறேன்—பாசப் பிணைப்பு அஃது என்பதால் பெருமிதம் கொள்கிறேன்.

நான் பெற்றிடும் இந்தப் பெருமிதத்தைத்தான் மற்ற பேச்சாளர்களும் பெறுவர் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்; மிகப் பெரியதோர் குடும்பம் நமது கழகம் என்ற இலக்கணம் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது என்பதை உணர்ந்து மகிழ்கிறேன்,

புதுப்பாளையம்
சிறுவாளூர்
தூக்கநாய்க்கன் பாளையம்
தாசப்பகவுண்டன் புதூர்
கூடக்கரை
நம்பியூர்
பவானிசாகர்
புஞ்சைபுளியம்பட்டி
காவலிபாளையம்
உக்கரம்
சத்தியமங்கலம்
கோபிசெட்டிபாளையம்
தாளக்கொம்புபுதூர்
பெருந்தலையூர்
பொத்தபாளையம்
உடையாம்பாளையம்
கெம்பநாயக்கன் பாளையம்
கோவை நகர உட் கிளைகள்
கோவை நகரம்
தாயனூர்
தோலம்பாளையம்
கெண்டேபாளையம்
காரமடை
எல்லப்பாளையம்
வரதய்யன்பாளையம்
அன்னூர்
நீலிபாளையம்
கருவலூர்
பெரியஆயிபாளையம்
ராக்கியாபாளையம்
அம்மாபாளையம்
அவிநாசி
சேவூர்
சாவக்கட்டுபாளையம்
திருமுருகன்பூண்டி
சிறுமுகைபுதூர்

பகத்தூர்
வடுகபாளையம்
மேட்டுப்பாளையம்
காளிங்கராயன்பாளையம்
தொட்டிபாளையம்
அத்தாணி
சவுண்டப்பூர்
பவானி
கவுந்தப்பாடி
அந்தியூர்
ஒலகடம்
ஆண்டிபாளையம்
குருவரெட்டியூர்
கந்தாம்பாளையம்
கிரனூர்
ஆலாம்பாடி
பச்சாம்பாளையம்
நாச்சிபாளையம்
புதுப்பை
எரசனம்பாளையம்
கன்னிவாடி
மூலனூர்
புளியம்பட்டி
லக்கமநாயக்கன்பட்டி
வெள்ளகோயில்
முத்தூர்
காங்கயம்
வரப்பாளையம்
தாராபுரம்
எலகாம்வலசு
கெல்லிபாளையம்
சிவன்மலை
வெள்ளவாவிபுதூர்
காமாட்சிபுரம்
கண்ணம்பாளையம்
பட்டணம்
பாப்பம்பட்டி
அப்பநாயக்கன்பட்டி
சூலூர்
வாகராயம்பாளையம்

ராசிபாளையம்
அருகம் பாளையம்
திருப்பூர்
சோமனூர்
கோம்பக்காடு
பல்லடம்
பள்ளபாளையம்
வதம்பச்சேரி
சேகம்பாளையம்
காமநாயக்கன்பாளையம்
பூலவாடி
துங்காவி
தாமரைப் பாடி
கணியூர்
சோளமாதேவி
மடத்துக் குளம்
கொழுமம்
கொமரலிங்கம்
சாமராயபட்டி
மலையாண்டி கவுண்டனூர்
கண்ணம நாயக்கனூர்
உடுமலைப்பேட்டை
தேவனூர் புதூர்
காரத்தொழுவு
வால்பாறை
வாட்டர் பால்ஸ்
கல்லூர்
பச்சைமலை
பழனியூர்
பெத்த நாயக்கன் பாளையம்

ஆனமலை
காளிபாபுரம்
பழனிக் கவுண்டனூர்
பொள்ளாச்சி – பல வட்டங்கள்.
கோடம்பட்டி
புளியம்பட்டி
ராசக்கா பாளையம்
கொப்பம் புதூர்
வடசித்தூர்
வெள்ளை கவுண்டன் புதூர்
அரசன் பாளையம்
கிணத்துக் கடவு
சேரி பாளையம்.
மொடக் குறிச்சி
அரச்சலூர்
மேலப்பாளையம்
புதுப்பாளையம்
குமாரபுரி
சங்கூர்
வீரப்பன் சத்திரம்
பெரியஅக்ரகாரம்
ஈரோடு
குன்னத்தூர்
ஊத்துக்குளி
பெருமாநல்லூர்
பெங்கால்மட்டம்
மஞ்சூர்
குன்னூர்
உதகமண்டலம்

தம்பி! புஞ்சை புளியம்பட்டி தோழர் சாமிநாதன் அனுப்பிய கடிதத்தின் மூலம், நான் கோவை மாவட்ட சுற்றுப் பயணத்தின்போது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஊர்களின் பட்டியலைத் தொகுத்துத் தந்திருக்கிறேன்.

இத்தனை ஊர்களிலும்-இவைகளில் பல, பாளையங்கள்-நமது கழகத்திடம் பற்றுநிரம்பக் கொண்டவர் பல்லாயிரவர் இருந்திடக்கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன். அவர்கள் ஆர்வத்துடன் கூறுகின்றனர். "அண்ணா! இந்த முறை வெற்றி நமக்குத்தான்!! கவலைப்படாதீர்கள்," என்று.

அவர்களுக்குப் புள்ளிவிவரம் போதுமான அளவு தெரியாது. மேற்கோள்கள் அவர்கட்கு மனப்பாடமாகவில்லை. வரலாற்றுச் சான்றுகளை அவர்கள் தேடி அலைந்து கொண்டில்லை.

கண் இருக்கிறது, காண்கின்றனர்; காங்கிரசாட்சியால் நாடு கொண்டுவிட்ட அலங்கோலத்தை.

காது இருக்கிறது, விம்மல் குமுறல், பெருமூச்சு, கதறல் விழுகிறது.

# வயலினைபார்த்து வயிற்றையும் பார்த்தால்

அறிவு இருக்கிறது; தூய்மை கெடாத அறிவு; சிந்திக்கிறார்கள்! தெளிவுபிறக்கிறது.

வயலைப் பார்க்கிறார்கள் வயிற்றையும் பார்த்துக் கொள்கிறார்கள்!

வரட்டும்! வரட்டும் இந்த முறை ஓட்டுக்கு'-என்று மெல்லிய குரலில் ஆனால் உறுதி நிரம்பிய தன்மையில் கூறுகிறார்கள.

இவர்களிடம் காங்கிரஸ் தலைவர்கள் சென்று, நாங்கள் இப்போது நாலாவது ஐந்தாண்டுத்திட்டம்போட்டிருக்கிறோம் என்று சொன்ன உடனே; பூரித்துப்போய் விடுவார்களோ! ஏமாளித்தனமான எண்ணம்!

திட்டம்தானே ஐயா! ஐந்தாண்டுத் திட்டம்!! தெரியுமே! பார்த்தோமே!! அனுபவித்துக்கொண்டுதானே இருக்கிறோம் திட்டங்களை!!

—என்றுதான் சலிப்புடன் பேசுவார்கள். அவர்கள் திட்டங்களுக்கு விரோதிகள் அல்ல! ஆனால் திட்டங்கள், ஏழைக்குப் பயன்படவில்லையே என்ற வேதனையால் தவிககின்றார்கள்.

அவர்களின் சார்பிலே பணியாற்றிடும் ஆச்சார்ய வினோபா பாவே, அவ்வப்போது காங்கிரசாட்சியினால் விளைந்துள்ள கேடுபாடுகளை விளக்கிக்கொண்டு வருகிறார்.

அவருக்குப் பூஜை நடத்தக்கூடக் காங்கிரஸ் தலைவர்கள் முன்வருகிறார்கள்; ஆனால் அவருடைய அறிவுரையின்படி நடந்திட மட்டும் மறுக்கிறார்கள். முடிய வில்லை!!

தம்பி, இந்த ஐந்தாண்டுத் திட்டம்பற்றி வினோபா மிகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். இதனை 'குருட்டுத் திட்டம்' என்றே கூறுகிறார். நிலைமையைத் தெரிந்துகொள்ளாதவர்கள் தீட்டிடும் திட்டம். அவர்கள் மெத்தப் படித்தவர்களாக இருக்கலாம், ஆனால் ஏழைகளை அவர்கள் கண்டதில்லை!! — என்று சாடுகிறார்.

நிலைமை மிகவும் சீர்கேடடைந்துவருகிறது. இதை தில்லியிலுள்ள நமது தலைவர்கள் பார்க்காமல் இல்லை. அவர்கள் அவற்றை நன்கு அறிவார்கள். ஆனால் அவற்றிற்கு மாற்று என்ன என்பதைக் கண்டறிய திறனில்லாதவர்கள் என்றே நான் வருத்தத்துடன் கூறவேண்டியிருக்கிறது.

திட்டத்தை இயற்றியவர்கள் மிகப் பெரியவர்கள், அவர்களில் சிந்தனையாளர்கள், பொருளாதார சமூக சாஸ்திர நிபுணர்கள் அனைவரும் இருக்கிறார்கள், ஆனால் அனைவருமே இந்தத் தேசத்தின் ஏழையைக் கண்டறியாதவர்கள்.

எல்லோரும் பட்டணத்தையும் பட்டணத்தின் பகட்டான வாழ்க்கையையும் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். முதுகோடு முதுகாக ஒட்டிக்கிடக்கும் விவசாயியின் வயிற்றையோ மற்ற ஏழைக் கிராம மக்களின் நிலைமையையோ அவர்கள் கண்டறிந்ததில்லை என்றே கூறவேண்டும். அதைத்தான் திட்டமும் பிரதிபலிக்கிறது.

பதவிபெறும் நோக்குடன் காங்கிரசைக் குறைகூறித் திரிகிறார் என்று வினோபாவேயைக் கூறிடும் துணிவு வராது என்று நம்புகிறேன். இதுவரையில் அத்தகைய துணிவு வரவில்லை!

அவருடைய கண்டனம், மனம் வெதும்பி வெளி வந்திருக்கிறது, இந்த இலட்சணத்தில் திட்டத்தைத் தீட்டியும் நடத்தியும் வந்திருக்கும் காங்கிரசு, மீண்டும் ஆதரவு கேட்கிறதே, என்ன நியாயம்?

நியாயமற்றதுதான், ஆனால் நிதி இருக்கிறதே நிரம்ப! பணம் இருக்கிறதே, கோடிகோடியாக!! பணம் பாதாளம் வரை பாயுமே! — என்கிறார்கள்.

தம்பி! நாடு என்ன பதில் அளிக்கவேண்டும்? என்ன பதில் கிடைக்கப்போகிறது என்பது, உன் உழைப்பைப் பொறுத்து இருக்கிறது.

இடையே உள்ள நாட்கள் அதிகமில்லை; அவை வேகமாகவும் உருண்டோடிக்கொண்டுள்ளன. எனவே உன் நேரம் முழுவதும், நினைப்பு முழுவதும், அறிவாற்றல் அவ்வளவும், இந்த ஒரே காரியத்துக்கு என்ற உறுதியுடன் இன்றே பணியாற்றக் கிளம்பிடுவாயேல், தம்பி! வெற்றி நிச்சயம். நாடு வாழ்ந்திடும்; வாழ்த்திடும்! உன்னால் மட்டுமே இந்த வெற்றியைப் பெற்றுத்தந்திட முடியும்; ஆனால் ஓரேஒரு நிபந்தனை; மற்ற எதற்கும் இரண்டாவது இடமே—முதல்இடம், ஜனநாயகப் பாதுகாப்புக்கே — கழக வெற்றிக்காகப் பணியாற்றுவதற்கே — என்ற உறுதியுடன் தொண்டாற்றவேண்டும். முடியுமா? செய்வாயா?

கேள்வி கேட்கிறேன் பார், கேள்வி - செய்வாயா? என்று. இப்போதே அதைத்தானே செய்துகொண்டிருக்கிறாய்!! அந்த மகிழ்ச்சி தந்திடும் வலிவுதானே என்னையும் வேலை செய்திடச் செய்கிறது.

அண்ணன்,

அண்ணாதுரை

## தாரீர் நீதி!

இருக்கின்ற இடையூறு ஏற்றத் தாழ்வு
இல்லாமை வறுமைப்பேய் துன்பம் தீயாய்
எரிக்கின்ற நிலைகாணீர்! நாட்டை ஆள்வோர்
எழில்மாது மதுக்கோப்பை என்னும் போக்கில்

வரிவேங்கைப் புலிபோல வரியைப் போட்டு
வதைக்கின்றார் வாழ்கின்றார்; துக்ளக் ஆட்சி
புரிகின்ற நிலைகாணீர்! நல்ல தீர்ப்பு
பொதுத்தேர்தல் தனில்நாட்டி தாரீர் நீதி!

— சுரா.




## 2—26

## இராமதூதனே எழுந்திரு!

“நம்மைப் பிடிக்கத்தான் வருகிருர்கள் போலிருக்கிறது!” குன்றின்மீது ஏறிவந்த போர் வீரர்களைப் பார்த்தபடி, இவ்வாறு திருமேனி மெல்லக் கூறினுள்.

“ஆமாம் திருமேனி, இந்தக் குலசேகரனின் ஆசைக் கப்பல் புயலில் சிக்கிக்கொண்டது!” என்று குலசேகரன் புன்னகையோடு சொன்ஞன். அந்தப் புன்னகைக்கு அடியில் வேதனையின் மெல்லிய ரேகைகள் ஓடியிருந்தன.

“அய்யோ!”

“என்ன திருமேனி!”

“கனகசேனனும் அல்லவா அவர்களோடு வருகிருன்!”

“அப்படியா?”

“இப்பொழுது எப்படி அத்தான், தப்புவது?” என்று அவள் கண்கள் கலங்கக் கூறினுள், அவன்முகத்தை ஏறிட்டுப் பார்த்து.

“பயப்படாதே திருமேனி! பயமே ஆபத்தைத் தாண்டும் பாலமாகி விடாதோ!—இதோ இந்தப் பக்கமாகச் செடி கொடிகள் மிகவும் அடர்ந்திருக்கின்றன! இந்த வழியாக நான் கீழே இறங்குகிறேன்! எப்படியும் அவர்கள் கையில் சிக்காமல் தப்பிச் செல்ல முடியும் என்ற தைரியம் எனக்கு உண்டாகிறது! வருபவர்களைச் சிறிதுநேரம் தாமதப்படுத்து—ஏதாவது பேசு! தைரியத்தைக் கைவிடாதே!” என்று கூறி, குலசேகரன் வேகமாகநடந்து செடிகளுக்கிடையே மறைந்துவிட்டான்.

திருமேனியின் மனம், சிறகொடிந்த பறவையைப்போல அச்சத்தால் துடித்தது.

உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன் ஓடி ஒளிந்த இடத்தையே உற்றுப் பார்த்தபடி, சிறிதுநேரம் சிலைபோல் நின்றிருந்தாள். ஆபத்து எதுவும் அவருக்கு வரக்கூடாதே என்ற அச்சவுணர்ச்சி அவள் மனத்தில் தலைதூக்கியிருந்தது.

“வருபவர்களைச் சிறிதுநேரம் தாமதப்படுத்து—ஏதாவது பேசு!’ என்ற அவனது வார்த்தைகள், அவள் கவனத்திற்கு வந்தன.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, வானத்தைப் பார்த்தபடி ஒரு கணம் யோசித்தாள்.

“வைபத்தியக்காரி அல்லவா, திருமேனி!” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, மேலாடையைச் சரியாக எடுத்துப் போட்டுக்கொண்டு, அடுத்திருந்த பாறையின் மீது போய் உட்கார்ந்தாள். முகத்தைத் துடைத்துக்கொண்டு காட்டு ரோஜா மலர் ஒன்றைப் பறித்து அதைத் தன் சிவந்த கன்னத்தில் ஒற்றியெடுத்தபடி.

ஆணழகனை மனம் நாடி, துடிக்குதே என் ஆவி! போடி! அவரைத் தேடி கூடிக் குலவி மகிழ வாடியிருக்கிறேனென்று ஓடி அழைத்து வாடி! சேடி! இங்கே ஓடி அழைத்து வாடி!

என்று ஓர் இசையை மெல்ல முணுமுணுத்தாள்.

“திருமேனி!” என்று அங்கே வந்து நின்ற கனகசேனன் பெருமிதத்தோடு அழைத்ததைக் கேட்காதவளைப் போல.

“ஓடி அழைத்து வாடி! சேடி! இனகே ஓடி அழைத்து வாடி!”

என்ற அடிகளைச் சிறிது உரத்த குரலில் இசைத்தாள்.

“எங்கே அவன்?” என்றுகோபத்தோடு கனகசேனன் கேட்டான்.

அவனைத் திரும்பிப் பார்க்காமலேயே, “எங்கே அவர் என்று என்னையே கேட்கிருயே தோழி! என் ஆசைக்கினியவர் இருக்குமிடம் தெரிந்தால், உன்னை ஏண்டி அனுப்புகிறேன்—தேடி அழைத்து வரும்படி? இதயம் கவர்ந்தவர் இருக்குமிடம் அறிந்தால்—அடி பேதைப் பெண்ணே—நானே அல்லவா, சிறகு கட்டிப் பறந்துபோய் இருப்பேன்!” என்று ரோஜா மலரைக் கண்ணில் ஒற்றிக்கொண்டே கூறினுள்.

“என்ன இனிமேலும் ஏமாற்ற முடியாது திருமேனி, ஏமாற்ற முடியாது!”

“ஏமாற்றுகிறேனு? நானு? உன்னையாடி ஏமாற்றுகிறேன்! எதற்கடி இந்த வெட்டிப் பேச்சு? வேகமாகப் போடி—என் வேதனையைப் போக்க அவரை அழைத்து வாடி!”

“திருமேனி, இதெல்லாம் என்ன உளறல்?”

“உளறல் அல்ல—என் உள்ளக் குமுறலடி, என் உள்ளக் குமுறல்! நாளை வருகிறேன் என்று என் உயிர் துடிக்கச் சொல்லிப் பிரிந்தவர்—மாதங்கள் மூன்ருகியும் வரவில்லையே—மனந் துடிக்க நானொருத்தி இங்கே இருக்கிறேன் என்பதை மறந்துவிட்டாரோ? அல்லது நான் இறந்துவிட்டதாக எண்ணிவிட்டாரோ?” என்று சோகத்தோடு சொல்லிக்கொண்டே, முகத்தைக் கனகசேனன் பக்கம் திருப்பாமலேயே, சாய்ந்து உட்கார்ந்தாள்.

“திருமேனி!”

“போடி, அவரைத் தேடி அழைத்து வாடி!”

“ஆமாம், அவனைத் தேடிப் பிடித்துவந்து, உன் எதிரிலேயே துண்டு துண்டாக வெட்டிப் போடப் போகிறேன்!”

“உஸ், மெல்லப் பேசடி—யாராவது கேட்டால் வயிறு நோகச் சிரிக்கப் போகிருர்கள்! அவர் எப்படிப்பட்ட வீரர் தெரியுமா தோழி, உனக்கு? இந்தப் பாறை போன்ற பரந்த அவரது மார்பையும், மலை போன்ற தோள்களையும் கண்டாலே, சேனை வீரர்கள் செத்து விழுவார்களே! வாள் வேல் ஈட்டி எதுவுமே அவர் உடலைத் துளைக்க

முடியாதடி! வைர உடலும், வஞ்சமில்லா உள்ளமும் பெற்றவரடி என் கண்ணாளர்! கோழைப் பெண்ணை, அப்படிப்பட்டவரையா கொல்ல முடியும் உன்னால்?'' என்று சொல்லி நிறுத்தி, அவள் கலகலவென்று சிரித்தாள்

"உன் பேச்சைக் கேட்கக் கேட்க எனக்கு ஆத்திரம் குறைந்து வேதனை அதிகமாகிறது திருமேனி!''

"நீ இங்கு நின்று இன்னமும் மூச்சுவிடுவது, எனக்கு வேதனை குறைந்து ஆத்திரந்தான் அதிகமாகிறது சேடி!''

'போதும் திருமேனி. நான் யாரென்றுவது திரும்பிப்பாரேன்!''

''சுரலை மாற்றிப் பேசினால் மட்டும், நீ ஆணாகிவிட முடியுமாடி தோழி!''

"நான் தோழியுமல்ல, மண்ணாங்கட்டியுமல்ல.''

"மண்ணாங்கட்டியாக நீ இருந்தால், நான் கொட்டிய கண்ணீர் மழையில் இந்நேரம், கரைந்தல்லவா போயிருப்பாய்!'' என்று சொல்லிக்கொண்டே அவள் முகத்தைத் திருப்பினாள்.

கனகசேனனைக் கண்டதும், மிகவும் பயந்துவிட்டவளைப்போல, உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டுச் சட்டென்று "யார் நீ? யார் நீ?'' என்று அகல விரித்த கண்களோடு கேட்டாள்.

"நான் தெரியவில்லையா? உண்மையாகவா தெரியவில்லை? திருமேனி?''

"தெரிகிறது தெரிகிறது, நன்றாகத் தெரிகிறது! ஆனால்—ஆனால்......''

"என்ன திருமேனி ஆனால்?''

"இடம் தவறி வந்துவிட்டாய்; அவள் அல்ல நான்.''

"இடம் தவறி வந்துவிட்டேனா? அவள் அல்லவா நீ?—இதெல்லாம் என்ன பேச்சு திருமேனி?''

"ஒரு நாளா இரண்டு நாளா, ஒரு மாதமா இரண்டு மாதமா, ஓராண்டா இரண்டாண்டா...... அய்யோ எத்தனை ஆண்டுகள் நான் இங்கே சிறையிலிருப்பது? அழுதழுது கண்ணீர்கூட வற்றிவிட்டதே! அவரை எதிர்பார்த்து எதிர்பார்த்துக் கண்கள் கூடப் பூத்துவிட்டனவே! கழுத்தில் தாலி இருக்கிறது — அதைக் கட்டியவருக்கு நான் இருக்கும் இடம் தெரியுமோ தெரியாதோ? தெரிந்தும்—மனைவியைச் சிறையெடுத்துச் சென்றவன் மாவீரனாயிற்றே—மலையையும் தூக்கும் தோள் உரமும், மன்னாதி மன்னர்களையும் காய்ந்தசருகுகளைப் போலக் காலால் உதைத்துச் செல்லும் நெஞ்சுரமும் பெற்றவனாயிற்றே! நாடற்ற நாடோடியாகி விட்ட நான், நாடும் நல்ல போர் வீரர் படையும் கண்ட அவனை எப்படிப் போர்க்களத்தில் எதிர்த்துப் பெற்றவளைய மீட்கப்போகிறேன் என்று சித்தம் சோர்ந்து சும்மா இருந்துவிட்டாரோ?—என்று அழுதகண்களோடு அசோக மரத்தினடியில் உட்கார்ந்திருக்கும் சீதையைத் தேடித்தானே, நீ வந்திருக்கிறாய்?''

"திருமேனி, விளையாடாதே!''

"இராம தூதரே, உன்னோடு விளையாட நானும் உன்னைப்போல என்ன கிளைத்தாவியோ?' என்று திருமேனி சொன்னதும், கனகசேனனின் அருகில் வந்து நின்ற போர் வீரர்கள், 'கொல்'லென்று சிரித்துவிட்டார்கள்.

ஆத்திரத்தாலும் அவமானத்தாலும் கொட்டப்பட்ட கனகசேனன், "உங்களை யாரடா இங்கே வரச்சொன்னது, போங்கள்! அவன் எங்கே இருக்கிறான் என்று தேடுங்கள்! எப்படியும் அவனைத் தேடிக் கண்டுபிடித்தாகவேண்டும்! போங்கள்!'' என்று கட்டளையிட்டதும், போர்வீரர்கள் சிரமப்பட்டுச் சிரிப்பை அடக்கிக்கொண்டு, ஒவ்வொருவராக அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டனர்.

திருமேனியை முறைத்துப் பார்த்தபடி, அங்கே இருந்த பாறையின் மீது போய் உட்கார்ந்து, "உன் பேச்சைக் கேட்க எனக்கு ஆத்திரமாகவும் இருக்கிறது, அழுகையும் வருகிறது!'' என்றான்.

"இராம தூதனே எழுந்திரு!''

"நான் இராமனின் தூதனுமல்ல எமனின் தூதனுமல்ல! என்று வெறுப்போடு கூறி, முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

'என்னிடத்தில் பொய்யா சொல்கிறாய்? பார், உண்மையை உன்னையே கக்கும்படிச் செய்கிறேன்!'' என்று சொல்லிக்கொண்டே அவள் அவ்விடத்தைவிட்டுச் சென்றாள்.

கனகசேனன் திரும்பிப்பார்த்தான். இப்படி எங்கே செல்கிறாள் என்பதொன்றும் தோன்றாமல் விழித்தான். மரமொன்றின் மீதேறி, ஒரு கிளையை ஒடித்து எடுத்துக்கொண்டு திருமபவும் அவள் மேடையின் அருகே வந்தாள்.

"இராமதூதன் தானே நீ? உண்மையை ஒத்துக்கொள்—இல்லாவிட்டால்...'' என்று கூறியவாறு, அவனை அடிக்க கிளையை ஓங்கினாள்.

"இரு இரு, திருமேனி! நான் சொல்வதைக் கேள்!'' என்று அவன் உடலை வளைத்துக்கொடுத்தான்.

"அடி விழுவதற்கு முன்பு சொல்லிவிடு, அனுமான் தானே நீ?''



"ஆமாம் திருமேனி!"

"வால் எங்கே காட்டு?" என்று கிளையைக் கீழே போட்டுவிட்டு அவன் அருகே வந்தாள்.

"உன் குணத்தை நன்றாகத் தெரிந்துகொண்டுதான் அவன் உன்னை நன்றாக ஏமாற்றிவிட்டிருக்கிறான்!"

"என்னை ஏமாற்றினானா — யார் அவன்?"

"அவன் யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப்போகிறான்—முதலில் நான் யார் என்று தெரிந்துகொண்டாயா?"

"நான் தெரிந்துகொள்ள வேண்டுமா — நீயேதான் ஒத்துக்கொண்டாயே!"

"திரும்பத் திரும்ப நீ அந்த இராமன் சீதை கதையையே பேசிக்கொண்டிருந்தால், நான் இராவணனாகிவிடுவேன்!"

"அட இராவணனாகிவிடுவாயா?"

"ஆமாம், உண்மையிலேயே ஆகிறேனா இல்லையா என்று பார்!"

"இராவணனாக முடியாதடா உன்னால்! அந்த மாவீரன் எங்கே, மண் பொம்மையான நீ எங்கே? ஆனால் உன் கன்னத்தில் ஒரு அடி கொடுத்தால், அப்படியே சுருண்டு விழுந்து, கும்பகர்ணனாகிவிட முடியும் உன்னால்! அதன் பிறகு சுய நினைவுவந்து நீ எழ, ஆண்டுகள் பலவாகும்!"

"திருமேனி, விளையாட்டுப் போதும்! நான்தான் கனகசேனன் தெரியவில்லையா!"

"கனகசேனனா? நான் எங்கோ கேள்விப்பட்டிருக்கிறேனே?"

"இந்த மண்ணின் சொந்தக்காரன், இந்தத் திருமேனியின் மணாளன்!"

"ஓகோ சேரநாட்டு இளவரசனா? எப்பொழுது நீ இங்கு வந்தாய்?"

"அட பைத்தியமே, பைத்தியமே!"

"பைத்தியமா? யார்?"

"நீ அல்ல திருமேனி, நான்! நான்தான் பைத்தியம் — கோபித்துக்கொள்ளாதே, கண்ணே!"

"கோபித்துக் கொள்ளவில்லை! இனிமேலும் கோபித்துக் கொள்ள மாட்டேன்! ஆனால் ஒரு சந்தேகம்!"

"கேள் திருமேனி!"

"இங்கே இராமதூதன் இருந்தானே—எங்கே அவன்?"

"போய்விட்டான்!"

"சுத்தப் பொய்! அவன் தானாகப் போய் இருக்கமாட்டான்—நீதான் அவனை அடித்துத் துரத்தியிருப்பாய்!"

ஆமாம் திருமேனி, ஓங்கி கன்னத்தில் ஓர் அடி கொடுத்தேன்-அவன் ஓடிப்போய்விட்டான்!"

"தவறு!"

"அவனை நான் அடித்ததைச் சொல்கிறாயா?"

"இல்லை, இடந்தெரியாமல் இங்கு அவன் வந்ததைச் சொல்கிறேன்!"

"அதனால்தானே அவனை நான் அடித்துத் துரத்தினேன்! போனதெல்லாம் போகட்டும் திருமேனி, இப்படி அருகில் வந்து..."

"அருகில் வந்து?"

"உட்காரேன்! என் கண்ணே உட்காரக் கூடாதா?' என்று பல்லெல்லாம் வெளியில் தெரியக் கேட்டான்.

"ஏன் உட்காரக்கூடாது! உட்காரலாம்! ஆனால் உட்கார விருப்பமில்லை!"

"ஏன் கண்ணே, விருப்பமில்லை —என்னைத்தானே நீ மணந்து கொள்ளப் போகிறாய்!"

"இல்லை! நிச்சயமாக இல்லை!"

"ஆ"

"உன்னை நான் மணந்து கொள்ளப் போவதில்லை! பாவம் நீதான் என்னை மணந்துகொள்ளப் போகிறாய்!"

"ஆகா! இன்னொரு தரம் அதையே திரும்பவும் சொல் கண்ணே, திரும்பவும் சொல்! இன்றுதான் திருமேனி, என் காதில் தேன் வார்த்தாய்!"

"சுத்த பைத்தியமாக இருக்கிறாயே, தேனை நாக்கில் வார்ப்பார்களா? காதில் வார்ப்பார்களா பைத்தியம்— உண்மையிலேயே நீ பைத்தியந்தான்?"

"இப்படித்தான் அவனோடும் நீ விளையாடுவாயா, திருமேனி?"

"எவனோடு?"

"அவன்தான் நம் எதிரி குலசேகரனோடு!"

"குலசேகரனோடா, இல்லையே! சத்தியமாய் இல்லையே! நான் விளையாடவில்லை, அவர்தான் என்னோடு விளையாடினார்!"

"உன்னோடு அவன் விளையாடினானா? எவ்வளவு ஆணவம்? அவனைத் துண்டு துண்டாக வெட்டிப் போடவேண்டும்!"

"யாரை? குலசேகரனையா?

"ஆமாம்!"

"எதற்காக வெட்டிப் போட வேண்டும்?"

"உன்னோடு அவன் விளையாடலாமா—எவ்வளவு ஆணவம்?"

"அது ஆணவமோ இல்லையோ எனக்குத் தெரியாது — ஆனால் ஆனந்தமாக இருந்தது, அவர் என்னோடு விளையாடியபோது!"

"என்ன?"

"ஆமாம், அவர் என்னை என்னென்ன செய்தார் தெரியுமா? முனிவர் மண்டபத்தில் நான் தனித்துப் படுத்திருந்தேன், மேலே இருந்த சிற்ப வேலைப்பாடுகளைப் பார்த்தபடி! அவர் சிரித்துக்கொண்டேவந்து, என் பக்கத்தில் உட்கார்ந்தார்! என்னதான் செய்கிறார் பார்ப்போமே என்று நான் கண்களை மூடிக்கொண்டு பேசாமலிருந்தேன்! என் கையைப் பிடித்தார்!"

"ஐய்யோ!"

"கன்னத்தைத் தடவினார்!"

"அய்யோ!"

"அவர் தன் முகத்தை என் முகத்தருகே கொண்டுவந்து, என் உதட்டில் அவர் உதட்டை அழுத்தி, 'இச்'சென்று ஒரு முத்தம் கொடுத்தார்!"

"அய்யய்யோ! அதன் பிறகுமா நீ பேசாமல் இருந்தாய்?"

"அதெப்படி பேசாமல் இருக்க முடியும்? இன்னொரு முத்தம்கொடு என்று கேட்டேன்!"

"சேசே!"

"ஏன், நான் கேட்டு, முடியாது என்று அவர் மறுத்துவிட்டார் என்று நினைக்கிறாயா? அதுதான் இல்லை! நான் கேட்டும் சிலகொடுத்தார்! கேட்காமலும் சில கொடுத்தார். அதன் பிறகு அவர் செய்ததைச் சொன்னால், நீ செத்தே போவாய்! ஆமாம் — நீ செத்தே போவாய்! என்று அவள் பேச்சை நிறுத்திவிட்டு, அவன் முகத்தை உற்றுப்பார்த்தாள்.

[வளரும்]

# கேள்வி--பதில்!

1. அணுவைப் பிளக்க முடியும் என்ற விஞ்ஞான உண்மையை முதலில் அறிந்து கூறியவர் யார்?

19ம் நூற்றாண்டில் டால்டன் என்ற விஞ்ஞானி. ஆனால் அணுவையும் பிளக்கலாம் என்ற கருத்து, கதை, கவிதை வடிவில் அதற்கு நெடுங் காலத்துக்கு முன்பிருந்தே இருந்து வந்திருக்கிறது. 1945ல் அமெரிக்க முதல் அணு துண்டு தயாரித்து மெக்சிகோ பாலைவனத்தில் வெடித்துப் பரீட்சை பார்த்தது. முதல் அணுகுண்டுவை உருவாக்கக் கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் பிடித்தன.

2. நடு நிலைமைக் கொள்கைக்கு முழுக்க முழுக்கக் கட்டுப்பட்டு நடக்கும் நாடு உண்டா?

உண்டே! சுவிட்சர்லாந்து. நடுநிலைமைக் கொள்கைக்குப் பங்கம் வரக்கூடாது என்பதற்காக, ஐக்கிய நாடுகள் மன்றத்திலே கூட சுவிட்சர்லாந்து சேராமல் இருந்து வருகிறது.

3. ஏழையும் பணக்காரனும் சமமாக அனுபவிப்பது எதனை?

கவலை! ஏழை, எப்படிப் பணம் பெறுவது என்று கவலைப்படுகிறான்; பணக்காரன் இருப்பதை இழந்துவிடாமல் பார்த்துக் கொள்ளவும் உள்ளதை அதிகமாக்கிக்கொள்ளவும் என்ன வழி என்பதை எண்ணிக் கவலைப்படுகிறான்.

4. கிரஹங்களைப்பற்றி நமது முன்னோர்கள் இப்போதுள்ள விஞ்ஞானிகளைவிட அதிகமாக அறிந்திருந்தார்கள் என்று காலட்சேபக்கார் ஒருவர் பேசினார்; உண்மையா?

உண்மைதான்! காலட்சேபக்காரர் சொன்னது அல்ல! ஆனால் அவர்கள் அவ்விதம் பேசிக்கொண்டுவருவது உண்மைதான். பேச்சுதானே! ஆராய்ச்சி அல்லவே! புராணிகர்களைக்கொண்டு நாம் தெரிந்து வைத்திருக்கும் கிரஹங்களின் விஷயமே அலாதியானது; இப்போதைய விஞ்ஞானிகள் கிரஹங்களைப்பற்றி ஆராய்ந்து அறிந்திருப்பதோ முற்றிலும் வேறானது. புராணிகர்களுக்குக்கிரஹங்கள்எல்லாம், தேவர்கள்! விஞ்ஞானி அவைகளை ஒளிப்பிழம்புகள் அல்லது மண்டலங்கள் என்று ஆராய்ந்து அறிந்திருக்கிறான். விஞ்ஞானி கேட்டால்விலாநோகச்சிரிப்பான் கிரஹங்கள்பற்றி நமது புராணிகர்கள் கொண்டுள்ள கருத்துக்களை. சூரியனுக்கு மாணிக்கம், சந்திரனுக்கு முத்து, அங்காரகனுக்குப் பவழம், புதனுக்கு மரகதம், குருவக்கு புஷ்பராகம், சுக்கிரனுக்கு வைரம், சனிக்கு இந்திர நீலம் ராகுவுக்கு கோமேதகம், கேதுவுக்கு வைடூரியம் பிடித்தமானவை என்று நமது புராணிகர்கள் கூறுகிறார்கள்! விஞ்ஞானி இதைக் கேட்டால் எப்படிச்சிரிக்காமல் இருப்பான்?

5. மழை பெய்வது கண்டு எதிர்க்கட்சிகள் பயப்படுகின்றன என்று முதலமைச்சர் பேசுகிறாரே பொருள் என்ன?

பெரிய பதவியில்உள்ளவர்கள் பொருள் உள்ள பேச்சுதான் பேச வேண்டும் என்று எதிர்பார்க்கலாமா! அவர்கள் விடும் ஏப்பமே கீதம்! இருமலே தாளம்! பொருளும் பொருத்தமும் பார்த்துப் பேச வேண்டிய தொல்லை அவர்களுக்கு எதற்காக! ஆனால் முதலமைச்சர் பக்தவதசலம் அவ்விதம் பேசியது நகைச்சுவைப் பேச்சு! அப்படி நாடு எண்ணிக்கொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். மழை பெய்தால், சுபிட்சம் வரும்; சுபிட்சம் வந்தால எதிர்க்கட்சிகள் நாட்டிலே வளமில்லை என்று பேசி காங்கிரசுக்கு எதிர்ப்பு மூட்ட முடியாது, அதனால் மழை பெய்வது கண்டதும எதிர்க்கட்சிகள் பயப்படுகின்றன-இவ்வளவு 'பொடி' வைத்திருக்கிறாராம் முதலமைச்சர் அவருடைய பேச்சில்! ஆனால் பேட்டை பூந்தமல்லி காங்கிரசார் மழையைப் பலமாகக் கண்டித்தார்கள். பாழாய்ப் போன மழை என்று ஏசினார்கள். ஏன் தெரியுமா? பக்தவத்சலனாரின் பிறந்த நாள் விழா; காமராஜர் கலந்துகொள்ளும் விழா! மழை அன்று!! கோபம் வருத்தம், பேட்டையார்களுக்கு மழை மீது. காமராஜர் எதிரிலே முதலியாருக்குக் கோலாகலமான விழா நடத்தி, அவருடைய மதிப்பை உயர்த்தலாம் என்று திட்டமிட்டிருந்ததை இந்தப் பாழாய்ப் போன மழை வந்து கெடுத்துத் தொலைத்துவிட்டதே என்ற வருத்தம்.

6. நந்தாவின் வீழ்ச்சி யாரும் எதிர்பாராதது அல்லவா?

எப்படி அவ்விதம் கூறிவிட முடியும். நந்தாவின் ஜோதிடர்கள் திறமை மிக்கவர்களாமே! அவருக்கும் ஜோதிடத்திலே அளவுகடந்த நம்பிக்கையாம். அவர்கள் போதாத 'கிரஹம்' சேஷ்டை செய்யும் என்று முன்கூட்டியே அவருக்குச் சொல்லாமலா இருந்திருப்பார்கள்!

7. பர்மா இராணுவ சர்க்கார் முன்னாள் பிரதமர் யூ நூவை விடுதலை செய்திருக்கிறதே, இனி யூ நூ முழு உரிமையோடுதானே பணி புரிந்து வருவார்!

முழு உரிமை தரப்பட்டிருக்கிறது, யூ நூவுக்கு! திவ்ய க்ஷேத்திரங்களுககு யாத்தரை செல்ல!!

8. நந்தா இனி என்ன செய்வார் என்று கருதுகிறீர்கள்?

பகவத் நாம சங்கீர்த்தனம் செய்யக் கூடும்! அல்லது தன்னைக் கவிழ்த்தவர்கள் மீது பழி தீர்த்துக்கொள்ள, [காங்கிரஸ் கட்சியில்] தேர்தல் வேலையைக் கவனித்துக்கொள்ளக் கிளம்பக் கூடும்.

9. சுட்டேன், கொன்றேன்! என்றார்கள் கழகக்காரர், ஆனால் அதே சூட்டோடு சூடாக, தர்மபுரியில் வென்றேனா!! என்ன ஆயிற்று கழகப் பிரசாரம் என்று கேட்கிறாராமே முதலமைச்சர் பக்தவத்சலம், என்ன பதில் கூறுவது?

துகில் உரிந்த மறுநாளேவா துச்சாதனன் அழிந்தான் என்று கேட்டுப் பார்ப்பதுதானே! கொடுங்கோலை வீழ்த்த சில காலம் பிடிக்கலாம்; ஆனால் நிச்சயம் வீழ்ந்தே தீரும். இது வரலாறு! முதலமைச்சர் வாதாடுகிறார்; வரலாற்றை உணராமல்!

10. அமெரிக்க உணவு உதவி தாமதப்படுவதற்குக் காரணம் ஏதேனும் உண்டா?

திட்டமாகக் குறிப்பிட முடியாது. ஆனால் அமெரிக்க அதிபர ஜான்சன், மணிலாவில் ஏழு நாட்டு அதிபர்களுடன் கூடி வியட்நாம் விவகாரம் குறித்து வாதித்துக் கொண்டிருந்த அதே வேளையில், இங்கே, தலைநகரில், இந்திராகாந்தி டிடோ, மூவர் மாநாடு கூடி வியட்நாம் பற்றிய கருத்து அறிவித்தது அமெரிக்காவுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணி இருப்பதாகத் தெரிகிறது. இதுவும் ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

11. இந்தியப் பிரதமர், செக் அதிபருக்கு அளித்த ஒரு வரவேற்பில், ராஜ்யம், அல்லது பிராந்திய" அடிப்படையில்வளர்ச்சித் திட்டங்களுக்குப் போராடக் கூடாதென்றும், ஏற்கெனவே உள்ள திட்டங்கள் மூலமே வளர்ச்சிப்பணி காணவேண்டும் என்றும் குறிப்பிட்டிருப்பதன் பொருள் என்ன?

அவரேதான் தெளிவாகக் குறிப்பிடுகிறாரே, (சேலம் இரும்பாலை, கல்பாக்கம் அணு மின் நிலையம், விசாகப்பட்டினம், ஹாஸ்பெட் போன்றவற்றின்) தேவைகளுக்குக் குரல் கொடுககப்படுவது போன்று யாரும் எதுவும் கேட்காதீர்கள்; அப்படிக் கேட்பது நாட்டு நலனுக்கு உகந்ததல்ல என்று. அவர் பேச்சை ஊன்றிக கவனித்தால், நாலாம் திட்டத்தைக்கூட கைவிட்டுவிடத் தயாராக இருப்பதாகவும் தெரிகிறது. பரவலாக வட்டார வளர்ச்சிக்குக் கோரிக்கை எழுப்பக்கூடாது என்று கூறும் பிரதமர் 'இனி அடுத்து,' 'போகாரே', திட்டத்தைக் கூட நிறுத்திவிட்டு அப்மூலதன உதவியுடன், அவர் கண்ணில் படும் "ஏதாவது ஒரு" இடத்தில் "விவசாயத் திட்டம்" கூட தீட்டி அறிவிப்புக் கொடுத்தாலும் கொடுக்கலாம்! என்று தோன்றுகிறது!!

12. தமிழ் நாட்டின் பெரும்பான்மையான இடங்களில் 144 தடையுத்தரவு போடப்பட்டுள்ளதே!

ஆமாம்! இத்தடை யுத்தரவு பிரகடனப்படுத்தப்பட்டால், வீதியில், சாலையில் 4, 5 பேர் கூடி நிற்பதோ, சேர்ந்து போவதோ கூடாது என்று போலீஸ் தடுக்கும்; ஆனால், அரிசியை எதிர்பார்த்து நீண்ட 'கியூ' வரிசை நிற்பதையோ, 'கோதுமைக்காகக் கூடிக் குரலெழுப்பும் அவலத்தை அகற்றுவதையோ தடுக்க இயலாமல் தடுமாறுகிறது இச்சட்டம், இப்போது. ஆனல் சட்டம் போடப்பட்டது வேறொரு காரணத்துக்காக. என்றாலும் சிற்சில இடங்களில் 'உணவுக் கோரிக்கை'யை ஒடுக்கவும்பயன்படுத்த எத்தனிக்கிறதாம்!

13. சென்ற நவ 14-ல் நேரு பிறந்தநாளில் கொண்டாடப்பட்ட குழந்தைகள் நாள்' விழாவில் தமிழகமெங்கும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்திருந்ததாமே, உண்மையா?

இது உண்மையோ பொய்யோ, இந்தச் சமயத்தில் கொடும் புயலாலும் கடும் மழையாலும் தமிழகத்தின் பெரும் பகுதி 'அவலக குரவில்' ஆழ்ந்திருடபது மிக மிக உண்மை

14. உள்துறை அமைச்சராகப் பதவிப் பொறுப்பேற்றுக் கொண்ட சூட்டோடு சூடாக சவாண், எதிர்க்கட்சிகளைப் பல மாகச்சாடி இருக்கிறார் என்பதைக் கவனித்தீர்களா?

என்ன செய்வது. தேர்தல் நெருங்கிவிட்டது. தாங்கள் செய்துவிட்ட தவறுகள் பலவற்றின் விளைவு நாட்டில் அமோகமாக இருக்கிறது. அறுவடைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் மக்களது மனப்பான்மையும் தெளிவாகத் தெரிகிறது. 'பாடும் வரை பாட்டு' என்ற பழமொழி தெரியுமல்லவா உமக்கு. ஆசையை இராகத்தில் இழைககும்போது பனிரெண்டு மாத்திரை அளவு வரையில் நீட்ட இலக்கணம் இடம் தருமாம்! காங்கிரசார் எதிர்க் கட்சிகளைப் பாடும் முறையில், பனிரெண்டு மாத்திரை அளவையும் கடந்துவிட்டிருக்கிறார்கள். பாடலை ரசிப்பவர்கள் வாக்காளர்கள் தானே! வாக்குச் சீட்டில் முத்திரையிடும்போது நிதானித்து — சின்னத்தைக் கவனித்துக் குத்திவிட்டால், ராகம், தாளம், பல்லவி ஒழுங்காகி விடும்!

15. தடுப்புக் காவல் சட்டத்தின் வயது என்ன? இந்தியாவைப்போல் வெளிநாடுகளில் இதுபோன்ற சட்டங்கள் செயலிலிருக்கிறதா?

1950-ம் ஆண்டு சர்தார் வல்லபாய் படேல் முதன் முதலாகத் 'தற்காலிகமாக'க கொண்டு வந்தார் இச்சட்டத்தை. இப்போது 'தற்காலிகமாக' மூன்றாண்டுக் காலம், அது செயலிலிருக்க அனுமதித்திருக்கிறார்கள். இந்த ஆண்டுடன் அதன் வயது 16. இந்தியாவைப்போன்றவேறெந்த ஜனநாயக நாட்டிலும் இப்படியொரு சட்டம் தொடர்ந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனல் சில பொதுவுடைமை நாடுகளில் மட்டும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

16. அயூப் ஆட்சி கவிழும் என்று வதந்தி உலவுகிறதே, உண்மையா?

இங்கல்ல; இங்கிலாந்தில். அயூப் இங்கிலாந்து சென்றிருக்கும் இந்தச் சமயத்தில் இப்படியொரு கருத்தை பிரிட்டன ஏடு ஒன்று வெளியிட்டிருக்கிறது. அயூப்பின் உறவினர்கள் பலர் கோடீசுவரர்களாகிவிட்டதாகவும்பலர்பதவியில்ஒட்டிக்கொண்டுள்ளதாகவும், இராணுவ உதவிக்கு பீகிங்கையே எதிர்பார்க்கும் நிலைமையை பாக்.மக்களில் ஒரு பிரிவினரும், ராணுவத்தில் ஒரு பகுதியும் பலமாக எதிர்க்கிறதாம். சில பல ராணுவ உயர்மட்ட அதிகாரிகளையும், அயூப் அண்மையில் பதவி நீக்கம் செய்துள்ளாராம், இந்தியா-பாக் எல்லைப் போரை காரணம் வைத்து. இப்படிப்பட்ட சில காரணங்களால் 'ஆட்சி கவிழ்க்கப்படும்' என்று 'யூகங்கள்' வெளிவருகின்றன. என்றாலும் அயூப் ஆட்சியை வெளிப்படையாகவும் தீவிரமாகவும் எதிர்க்கும் வலுவான அணியொன்றை அமைக்கும் சிறந்த தலைமை அங்கே, இன்னமும் உண்டாகவில்லையென்றும் நம்பப்படுகிறது!

✻

சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.